பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 18 புதன்கிழமை 31.03.2021 கதிர் 146

**இனி அது ரகசியம் அல்ல!**

மாகாண சபைத் தேர்தல் விவ காரம்தான் இப்போது சூடுபிடித்தி ருக்கின்றது. தேர்தல் நடக்கும் என்ற பேச்சடிபட்டதுமே சிலர் கன வுலகில் பறக்கத் தொடங்கி விட்ட னர். இம்முறை விடேன் என்று விடாப்பிடியாக சில தலைவர்கள் சூளுரைக்கும் பக்கம்02

# மீண்டும் சு.க. ஆட்சியே எனது இலக்கு!

## கண்டியில் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின் மைத்திரி சபதம்

மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியை அமைப்பதே எனது எதிர்ப் பார்ப்பு. அதற்கேற்ற வகையில் கட்சி கட்டியெழுப்பப்படும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனா திபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கண்டியில் நேற்று, மல்வத்து மற் றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்த பின்னர் அங்கு நடைபெற்ற ஊடகவியலார் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடு கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது: –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சவால் களுக்கு மத்தியில் பயணித்த கட்சியா கும். மீண்டெழுவதற்கான சக்தி இந்தக் கட்சிக்கு இருக்கின்றது. 14 பேர் தற் போது நாடாளுமன்ற உறுப்பினர்க ளாக இருக்கின்றனர். இதற்கு முன்னர் 8 எம்.பிக்கள் அங்கம் வகித்த 2



## இலங்கையில் மீண்டும் பழிவாங்கல் ஆட்சி

# தமிழர்களைத் திருப்பியனுப்பும் முடிவை உடனடியாகக் கைவிடவேண்டும் ஜேர்மனி



### கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 31

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றும்போது, இணை அனுசரணை நாடாக செயற்பட்ட ஜேர்மனி தமிழ் புகலிடக் கோரிக்கையா ளர்களை திருப்பியனுப்ப நினைப்பது கவலை அளிக்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார். 2

## புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும்

### உலகத் தமிழர் பேரவை அதிருப்தி

புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் இலங்கை யின் தடைசெய்யப்பட்ட பட்டிய லில் இணைக்கப்பட்டமைக்கு உலகத் தமிழர் பேரவை அதி ருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கை அரசின் இந்த நட வடிக்கைக்கு எவ்வித சட்ட, அர சியல் அல்லது தார்மீக அடிப்படை யும் இல்லை என்றும், 2

## குற்றவாளிகளிடம் நீதியை எப்படி எதிர்பார்க்க முடியும்?

### காணாமல்போனோரின் உறவுகள் கேள்வி



(வவுனியா நிருபர்)

இலங்கையிடம் நீதியை வழங்கும் பொறிமுறையை சர் வதேசம் வழங்கியிருப்பது மிக வும் வேதனையான விடயம் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப் பட்ட உறவுகளின் சங்கத்தால் வவுனியா பழைய பஸ் நிலையத் துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட் டம் ஒன்று முன்னெடுக்கப்பட் டது. இதன்போது ஊடகங்களி டம் கருத்துத் 2

## பொலிஸ் மிருகத்தனத்தை மன்னிக்கப் போவதில்லை!

### பகிரங்கமாகக் கூறினார் அமைச்சர் கம்மன்பில



பொலிஸ் மிருகத்தனத்தை எந்த வகையிலும் மன்னிக்கப் போவதில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரி வித்தார்.

பன்னிப்பிட்டி பகுதியில் லொறி சாரதி யைத் தாக்கிய பொலிஸ் அதிகாரி மீது சட்டநடவடிக்கை எடுக்க தான் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொண்ட 2

### யாழ்.பல்கலை மருத்துவபீட

## நுண்ணுயிரியல் துறை பேராசிரியராக கலாமதி



யாழ்.பல்க லைக்கழக மருத்துவபீடத் தின் நுண்ணுயி ரியல் துறைக்கு கலாநிதி திருமதி கலாமதி முருகானந்தம் பேராசிரிய ராக நியமனம் பெற்றுள்ளார்.

அந்தத் துறையின் முதலா வது பேராசிரியர் 2

### கண்டி, மாத்தளையிலிருந்து வந்து

## கிளிநொச்சியில் புதையல் தோண்டிய ஐவர் சிக்கினர்



கிளிநொச்சி, வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் தமி ழீழ விடுதலைப்புலிகளின் அன்பு முகாம் அமைந்தி ருந்த காட்டுப் பகுதிக்கரு கில் புதையல் தோண்ட முற் பட்ட ஐவர் பொலிஸா ரால் கைது 2

## யாழில் 27 பேர் உட்பட வடக்கில் மேலும் 29 பேருக்கு கொரோனா

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு மாகாணத்தில் யாழ்ப் பாணத்தில் 27 பேருக்கும், கிளி நொச்சி, முல்லைத்தீவில் தலா ஒருவரும் என மொத்தம் 29 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப் பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரி வித்தார்.

அவர் மேலும் 2




## கிளிநொச்சியில் கோர விபத்து ஒருவர் சாவு; இருவர் படுகாயம்

கிளிநொச்சி ஏ – 9 வீதி கந்தசுவாமி கோயில் முன்பு நேற்று மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயி ரிழந்துள்ளார்.

குறித்த விபத்தில் படு காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அளவுக்கு கனவுலகு விரிகின்றது. ஆனால் தேர்தல் இப்போதைக்கு நடக்க மாட்டாது என்பதுதான் உள்வீட்டுத் தகவல்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த விவகாரம் – மாகாண சபைத் தேர்தல் விடயம் – விரிவாகப் பேசப்பட்டிருக்கின்றது. முதலில் ஓர் இணக்க நிலைமை ஏற்பட்டதாம். ஆனால் இறுதியில் சிக்கல் வந்து விடயத்தில் தீர்மானம் எடுக்காமல் தள்ளிப் போடவேண்டி நேர்ந்துவிட்டது என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

நடந்ததன் சுருக்கம் இதுதான்:–

மாகாண சபைத் தேர்தலில் எழுபது வீத உறுப்பினர்களைத் தொகுதி வாரியாகவும் முப்பது வீதத்தை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலும் தெரியலாம் என்று முன்மொழியப்பட்ட யோசனை முதலில் தெரிவிக்கப்பட்டது. அதற்கு அதிகம் எதிர்ப்பு இருக்கவில்லை. அது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால் அதற்குப் பின்னர் தெரிவிக்கப்பட்ட ஒரு யோசனைதான் – பரிந்துரைதான் – குழப்பத்தையும் முரண்பாட்டையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

தொகுதி வாரி முறைமையிலும், ஒரு தொகுதியில் ஒரு கட்சி ஒரு வேட்பாளரை நிறுத்துவதற்குப் பதிலாக மூன்று வேட்பாளர்களை நிறுத்தும் ஒரு திட்டத்தை அதிகாரத் தரப்பு முன்வைத்திருக்கின்றது. ஒரு தொகுதியில் ஒரு கட்சி வென்றாலும் அந்தத் தொகுதியைப் பிரதிநிதித்துவம் செய்யும் உறுப்பினர் யார் என்பது அத்தொகுதியில் போட்டியிட்ட அக்கட்சியின் மூன்று வேட்பாளர்களில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்ற யோசனை சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில போன்றோர் கடுமையாக எதிர்த்திருக்கின்றனர் எனத் தெரிகின்றது.

இந்தத் தேர்தல் திட்டமுறை யோசனையின் பிதாமகர் வழமைபோல பஸில் ராஜபக்ஷ என்றே கூறப்படுகின்றது. தொகுதி தோறும் பொதுஜன பெரமுன கட்சியோடு கூட்டுச் சேர்ந்த சிறிய கட்சிகளுக்கு வேட்பாளர் இடமளித்தாலும், அந்தத் தொகுதிகளில் பெரிய கட்சியான தமது பொதுஜன பெரமுனவின் வேட்பாளரே தெரிவாகின்றமையை உறுதிப்படுத்தவே பஸில் இப்படி ஒரு காய் நகர்த்தலை முன்னெடுத்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

தங்களது போன்ற சிறிய கட்சிகளுக்கு தொகுதிகள் தோறும் உறுப்பினர் இடமளித்துக் கொண்டு தெரிவாகும் உறுப்பினர் பதவியைத் தாங்கள் தட்டிச் செல்வதற்கான பஸிலின் தந்திரம் இது என்று விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல மற்றும் இது போன்ற சிறிய கட்சிகளின் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

அதனால் விடயத்தை தொடர்ந்து பேசி முடிவெடுப்பதற்காக அது ஒத்திவைக்கப்பட்டது.

இந்த சர்ச்சைக்கு இணக்கமான தீர்வு ஏற்பட்டால் கூட மாகாண சபைத் தேர்தல் இப்போதைக்கு நடத்த வாய்ப்பு அடியோடு இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அமைச்சரவையில் ஒரு முடிவு எட்டப்பட்டு , அந்த யோசனையை நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவாதித்து, முடிவெடுத்து, அதற்குப் பின்னர் எல்லை நிர்ணய ஆணைக்குழு கூடி, தொகுதிகளை வரையறை செய்து, பரிந்துரை சமர்ப்பித்து, அதை நாடாளுமன்றம் அங்கீகரித்து, பின்னர் அது சட்டமாக இன்னும் இரண்டு வருடங்கள் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வீராப்பா பாணியில் 'மணந்தால் மகாதேவி; இல்லையேல் மரணதேவி' என்று மாகாண முதல்வர் கனவுடன் காத்திருப்போர்தான் இன்னும் இரண்டு வருடங்களோ, மேலுமோ விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டி நேரும்... பாவம்!

– மின்னல் –

## யாழில் 27 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்ததாவது:–

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 320 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆய்வுகூடத்துக்கு அனுப்பப்பட்டன. அவற்றில் 7 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வு கூடங்களில் 755 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது, 22 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் 57 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இவர்களில் 7 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில் 2 பேர் திருநெல்வேலி பொதுச் சந்தை தொகுதியைச் சேர்ந்தவர்கள்.

யாழ்.பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவபீட மாணவன் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர் வவுனியாவைச் சேர்ந்தவர்.

அதேவேளை, திருநெல்வேலி சந்தை தொற்றாளர்களுடன் நேரடித் தொடர்புடைய இருவருக்குக் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது. இவர்கள் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த ஒருவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதில் உறுதிப்படுத்தப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் நோய் அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் தொற்று கண்டறியப்பட்டது.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனா நோய்த் தொற்று பி.சி.ஆர். பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது.

கிளிநொச்சியிலும் ஒருவருக்குத் தொற்று கண்டறியப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாநகர கடைத்தொகுதியில் 800 இற்கும் மேற்பட்டோரிடம் பெறப்பட்ட மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்காக கொழும்பு முல்லேரியாவுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அவரின் முடிவுகள் இதுவரை உத்தியோகபூர்வமாக வெளியாகவில்லை – என்றார்.

## பொலிஸ் மிருகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், உலகம் முழுவதும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறும் நிலையில் அரசைக் குறை கூற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு பொலிஸ் அதிகாரியால் ஒரு கறுப்பினத்தவர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின்போது அமெரிக்க அரசை எவரும் குறை கூறவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் பயணப் பொதிக்குள் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவத்திலும் அரசு இதனையே தெரிவித்

## நுண்ணுயிரியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இவராவார்.

2000ஆம் ஆண்டு விலங்கு மருத்துவமானிப் பட்டமும், 2007இல் முதுகலைமாணிப் பட்டமும் பெற்ற இவர் 2017இல் கலாநிதிப் பட்டம் பெற்றார்.

இவர் அளவையூர் பண்டிதர் நாகலிங்கத்தின் புதல்வியாவார்.

2004-07- 06 அன்று விரிவுரையாளராக நியமனம் பெற்ற இவருக்கு 2019 டிசம்பர் 21 முதல் பேராசிரியராக பேரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## மீண்டும் சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சந்தர்ப்பமும் உள்ளது. எனவே, எதிர்காலத்தில் சுதந்திரக் கட்சி ஆட்சியை அமைப்பதே எமது எதிர்ப்பார்ப்பு.

அரசுக்கு ஆதரவு வழங்கும் அதே வேளை கட்சியைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளும் தீவிரமாக முன்னெடுக்கப்படும் – என்றார்.

## கிளிநொச்சியில் புதையல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

செய்யப்பட்டுள்ளனர்.

மாயவனூர் காட்டுப் பகுதியில் நவீன ஸ்கானிங் இயந்திரத்துடன் மாத்தளை, கண்டி மற்றும் கொழும்பு பிரதேசங்களிலிருந்து வருகை தந்திருந்த ஐவர் நேற்று முன்தினம் புதையல் தோண்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் தகவல் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்தது.

இதையடுத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் ஐவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் பூஜை வழிபாடுகளுக்காக அழைத்து வரப்பட்ட வயோதிபர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்களிடமிருந்த புதையல் தோண்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் நவீன ஸ்கானிங் கருவி மற்றும் ஏனைய பொருள்கள், அவர்கள் பயணித்த வாகனம் ஆகியன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கைதானவர்கள் நேற்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் ஐவரையும் எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

## தமிழர்களைத் திருப்பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் பல தனிநபர்களும், அமைப்புக்களும் தடை செய்யப்படுகின்ற நிலையில், மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் ஜேர்மனி அங்கிருக்கின்ற தமிழர்களை திருப்பியனுப்ப முனைவது பாரதூரமான நிலைமையை ஏற்படுத்தக்கூடும்.

ஜேர்மனியில் இருக்கின்ற தமிழர்கள் இப்போதைக்கு இலங்கையில் வந்து வாழ முடியாத சூழ்நிலை இருப்பதை ஜேர்மனியும், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கருத்தில்கொள்ள வேண்டும். ஏனெனில், இலங்கையில் மீண்டும் பழி வாங்கல் ஆட்சியே இடம்பெறுகின்றது.

ஜேர்மனி, இந்த நடவடிக்கையை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். இலங்கைத் தமிழர்களைத் திருப்பியனுப்பும் தீர்மானத்தை ஜேர்மனி கைவிட வேண்டும் – என்றார்.

## குற்றவாளிகளிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவிக்கும்போதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:–

எமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி மூன்று வருடங்களுக்கும் மேலாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். எனினும், எமக்கான நீதியை எந்தவொரு அரசும் வழங்கவில்லை. எமது உறவுகளைத் தருமாறே நாம் போராட்டங்களை முன்னெடுக்கின்றோம். நாம் வேறு எதையும் இந்த அரசிடம் இருந்து எதிர்பார்க்கவில்லை.

எமக்கான நீதி ஒன்று கிடைக்கும் வரையில் நாம் இந்தப் போராட்டங்களை இடைநிறுத்தாமல் தொடர்ந்து முன்னெடுப்போம். சர்வதேச நீதியை நம்பியே நாம் போராடி வருகின்றோம். எனினும், ஜெனிவா தீர்மானத்தில் இலங்கைக்கு எதிராக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி தொடர்பாக எந்தப் பலன்களும் கிடைக்கவில்லை. நாங்கள் இழப்பீட்டுக்கான அலுவலகத்தையோ, காணாமல்போன அலுவலகத்தையோ கோரி போராட்டம் நடாத்தவில்லை.

குற்றம்செய்த குற்றவாளிகளிடம் நீதி கிடைக்கும் என்று நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்? அந்தவகையில் இலங்கையிடம் நீதியை வழங்கும் பொறிமுறையை சர்வதேசம் வழங்கியிருப்பது மிகவும் வேதனையான விடயமாகவே இருக்கின்றது.

எனவே, எமது துன்பங்களைத் தீர்த்து வைப்பதற்கான சர்வதேச நீதியை எதிர்பார்த்து நாம் காத்திருக்கின்றோம் – என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, தமிழ்க் குழந்தைகளும் பயங்கரவாதிகளா?, பாடசாலை சென்ற மாணவர்கள் எங்கே?, அரசின் பொறுப்பற்ற பதில்களைக் கண்டிக்கின்றோம் போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

## கிளிநொச்சியில் கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட மூவரில் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏ – 9 வீதி வழியாக பரந்தன் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியால் நடந்து சென்ற வருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்நிலையில், உயிரிழந்தவர் கிளிநொச்சி விவேகானந்தநகர் பகுதியைச் சேர்ந்த செல்லப்பா சந்திரகுமார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள அவரது சடலம் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் எனவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

இதேவேளை, படுகாயமடைந்த மற்றைய இருநபர்களும் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவித்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## புலம்பெயர் அமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஐ.நா. விதிமுறைகளை மீறும் செயலாகும் என்றும் உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

தாம் தமிழர்களின் அரசியல் உரிமைகளை மேம்படுத்துவதிலும், இலங்கையின் எல்லா பகுதிகளிலும் புனர்வாழ்வு, நிவாரண முயற்சிகளிலும் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை அரசின் இந்தத் தடை, நல்லிணக்க முயற்சிகளைப் பாதிக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகத் தமிழர் பேரவை, இலங்கையின் தெற்கு பகுதியில் உள்ள அரசசார்பற்ற அமைப்புகளுடன் இணைந்து செயற்பட்டு வந்தது எனவும் சுரேன் சுரேந்திரன் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும்தரப்பில் உள்ளவர்கள் ஒரு செங்கல் கூட கண்டி மாவட்ட அபிவிருத்திக்கு வைக்கவில்லை

## வேலுகுமார் குற்றச்சாட்டு

தேர்தல் காலத்தில் நாமே ஆளும் தரப்பில் உள்ளோம், எம்மால் தான் மக்களுக்கு பணியாற்ற முடியும் என்றார்கள். ஆனால், இரண்டு வருடங்கள் கடந்தும், ஒரு செங்கல் கல் கூட கண்டி மாவட்ட அபிவிருத்திக்காக வைக்கப்படவில்லை. என ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதி தலைவருமான வேலுகுமார் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பஹத்த ஹேவாஹெட காரியாலய திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போது, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கண்டி மாவட்டத்துக்கு பல வருடங்களுக்குப் பின் 2015 ஆம் ஆண்டு நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்தது. அதனை மிகச் சிறந்த முறையில் கடந்த ஆட்சியில் நாம் பயன்படுத்தினோம். கண்டி மாவட்டத்தில் பல ஆண்டுகள் தேங்கிக் கிடந்த உரிமை சார் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுத்தோம். அதே போன்று, புறக்கணிக்கப்பட்டிருந்த தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்தியில் எழுச்சியை ஏற்படுத்தினோம்.

கடந்த தேர்தல் காலத்தில் நாமே ஆளும் தரப்பில் உள்ளோம், எம்மால் தான் மக்களுக்கு பணியாற்ற முடியும் என்றார்கள். ஆனால், இரண்டு வருடங்கள் கடந்தும் ஒரு செங்கற்கல் கூட கண்டி மாவட்ட அபிவிருத்திக்காக அவர்களால் வைக்கப்படவில்லை.

கடந்த ஆட்சிக் காலத்தில் வீடமைப்பிற்கான காணி வழங்கல் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்தோடு இணைந்ததாக தனி வீட்டு திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. அவற்றில் பல வீட்டுத் திட்டங்கள் எமது காலப்பகுதியில் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்டன.

எனினும் 2018 ஆம் ஆண்டு இறுதி காலம் முதல், 2019 ஆம் ஆண்டின் இறுதிக் காலம் வரை ஆரம்பிக்கப்பட்ட பல வேலைத்திட்டங்கள் உள்ளன. அவை எமது அரசாங்கம் முடிவுக்கு வருகின்ற போது அரைவாசி கட்டப்பட்ட வீடுகளாக இருந்தன. ஆனால் இன்று இரண்டு வருடங்கள் கடந்தும் அவை அதே நிலையிலேயே உள்ளன. அவற்றின் அபிவிருத்திக்காக ஒரு சதமேனும் நிதி ஒதுக்கப்படவில்லை.



ஹேவாஹெட தொகுதியின், லூல்கந்துர தோட்டத்தின், தோட்ட வீடமைப்பு அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வீடுகள் அரைகுறையாக கைவிடப்பட்டுள்ளன. ஊராகளை மற்றும் ஹந்தானை தோட்டத்தில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யாது அரைகுறை நிலையில் உள்ளன.

இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ், ஹந்தானை தோட்டப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளுக்கும் அதே நிலைமையே காணமுடிகின்றது. தோட்டப் பகுதிகளின் நாம் கொண்டு சென்ற வீடமைப்பு திட்டங்கள் முற்றாக இந்த ஆட்சியில் ஸ்தம்பிதம் அடைந்திருக்கின்றன.

தோட்ட வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் ஒருங்கிணைப்பாளர்களுக்கு இவை கண்ணுக்குத் தெரியாதுள்ளது. இத்தகைய திட்டங்களை பூர்த்தி செய்து மக்களுக்கு வழங்குவதை விட்டு, வேறு ஏமாற்று வேலைகளை செய்து வருகின்றனர். தமது நண்பர்களை, தமக்குதவிய வியாபாரிகளை, சந்தோஷப்படுத்தும் வேலையை செய்து வருகின்றனர். தோட்ட மக்களை ஏமாற்றி, காணி தருகின்றோம், என கூறிக்கொண்டு, தமது சகாக்களுக்கு காணிகளை பெற்றுக்கொடுக்க மாவட்டம் முழுவதும் அலைந்து திரிகின்றனர்.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சிற்கு நாம் ஆரம்பித்து வைத்த திட்டங்களை முன்னெடுக்க இயலுமை இல்லையா? அல்லது இயலுமை இல்லாத பிரதிநிதிகளை கண்டி மாவட்டத்தில் வைத்திருப்பதால் இந்நிலைமையா? அல்லது இராஜாங்க அமைச்சரே இதைப்பற்றி தெரியாமல் இருக்கின்றாரா? என்ற கேள்வியையே மக்கள் சார்பாக நாம் முன்வைக்க வேண்டி இருக்கின்றது.- என்றார்.

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை தேசிய பிரச்சினையாக கருதவேண்டும்

## பீரிஸ் தெரிவிப்பு



அனைத்து அரசியல் கட்சிகளும் ஜெனிவா விவகாரத்தை தேசிய பிரச்சினையாக கருத வேண்டும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், குறித்த விடயத்தில் அனைத்து தரப்பினரும் அரசியல் நோக்கத்தை விட்டுவிட்டு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

மேலும், தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து விடுபட சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கை பேராசிரியர் குழு கொரோனா கண்டறியும் இலகுவான பரிசோதனையை அறிமுகப்படுத்தியது!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான எதிர்புடலை அடையாளம் காணும் இலகுவான பரிசோதனை முறையை பேராசிரியர் நீலிகா மாலவிகே உள்ளிட்ட ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக நிபுணர் குழுவினர் கண்டு பிடித்துள்ளனர்.

குறித்த பரிசோதனைக்கு விரல் நுனியில் இருந்து எடுக்கப்படும் ஒரு சொட்டு இரத்தம் போதுமானதாக இருக்குமென நிபுணர் குழுவினர் குறிப்பிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டவது தொடர்பாக முன்னெடுக்கப்படும் ஏனைய பரிசோதனை முறைமையை விட இது மிகவும் இலகுவானதென்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த ஆய்வினை மேற்கொள்வதற்கு சுமார் 3 ஆயிரம் குருதி மாதிரிகள் பெறப்பட்டன என ஆய்வில் பங்கேற்றிருந்த ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறை பேராசிரியர் நீலிகா மலவிகே, தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆய்வில் இந்தியா, பிரான்ஸ், தாய்வான், பிரித்தானியா, தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போரில் உயிரிழந்த வீரர்களின் நினைவாகக் கட்டப்படுகின்ற தூபியில் பதிக்க 20 கோடி ரூபா இரத்தினங்கள் நன்கொடை!

போரின் போது உயிரிழந்த வீரர்களின் நினைவாக கட்டப்படுகின்ற சந்தஹிரு சேயா தூபியில் பதிப்பதற்கு 20 கோடி ரூபா மதிப்பிலான இரத்தினங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இராஜாங்க அமைச்சர் லோகன் ரத்வத்தேவின் அறிவுறுத்தலின் பேரில், இரத்தினம் மற்றும் நகை ஆணையகத்தின் தலைவர் திலக் வீரசிங்க, குறித்த இரத்தினங்களை பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்னவிடம் ஒப்படைத்துள்ளார்.

இவைகளை இரத்தின வியாபாரிகள் மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ள நன்கொடையாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்தே நன்கொடையாக வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஐ.நாவில் ஆதரவு தெரிவித்த சீனாவுக்கு ஜனாதிபதி கோட்டா நன்றி தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த சீனாவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் கடந்த திங்கட்கிழமை தொலைபேசி உரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் சிறப்பான ஆதரவை இலங்கைக்கு வழங்கியமைக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது இருநாடுகளின் நல்லுறவை மேம்படுத்தல், பொருளாதாரம், அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை இலங்கைக்கு தேவையான உதவிகளை சீனா தொடர்ந்து வழங்கும் என சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உறுதியளித்துள்ளார்.



இதனிடையே இலங்கையில் சீனாவால் முன்னெடுக்கப்படுகின்ற அம்பாந்தோட்டை துறைமுகம், ஏனைய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மிகவும் திருப்தியளிப்பனவாகவும் விரைவாக அதனை நிறைவு செய்யுமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதன்போது கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100 ஆவது ஸ்தாபக வருட விழாவுக்கு சீனாவுக்கு ஜனாதிபதி வாழ்த்தும் தெரிவித்துள்ளார்.

# தவக்காலச் சிந்தனை



## மாற்றத்தின் முன்மாதிரிகளாவோம்

தவக்காலத்தின் முக்கிய வாரத்தில் எமது ஆன்மீக தேடலில் இறை இயேசு சொன்ன வார்த்தைகளோடு அவரது வாழ்வு பாதையில் நாமும் பயணிக்க அழைக்கப்படுகின்றோம்.

"மாலை வேளையானதும் அவர் பன்னிருவரோடு பந்தி அமர்ந்தார். அவர்கள் உண்டு கொண்டிருந்த பொழுது அவர் "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன்" என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் வருத்த முற்றவர்களாய் "ஆண்டவரே, அது நானோ? என ஒவ்வொருவரும் கேட்கத் தொடங்கினர், அதற்கு அவர் என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான்.

இவை இன்றும் எம்முன்னே நடந்தேறுகிறதை பல வடிவங்களில் காண்கின்றோம். எமக்கு பகைவர்கள் வேறு இடத்தில் இருந்து வருவதை விட எம்மோடு கூட இருந்தே குழி பறிப்போரே அதிகமாகி விட்டது. இவை ஆன்மீகத்திலோ, அரசியலிலோ, சமூகத்திலோ, குடும்பங்களிலோ அரங்கேறுவதை காண முடியும்.

இத்தவக்கால புனித வாரத்தில் எமது வழிபாடுகள் மட்டுமல்ல வாழ்விலும் எம்மை அறியாமல் நாம் பிறருக்கு இடைஞ்சலாக, தடைக்கற்களாக, பல பிரிவுகளாக இருந்து சுய நலத்திற்காக காட்டிக் கொடுப்பதிலும், தூசிப்பதிலும், குறை குற்றங்களை சுமத்துவதிலும் மனித பலவீனத்தால் செயல்படுத்தி வரும் ஒவ்வொரு செயல்களும் அன்று இயேசுவின் பந்தி அமர்ந்தவர் போல இருந்த எம் தவறுகளை உணர்ந்து தூய்மைப்படுத்தி மனித பலவீனத்தை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு மனம் மாறுவதே இந்த புனித வாரத்தை அர்த்தமுடையதாக மாற்றலாம்.

என் பாவத்தை பொறுதருளும், நான் பாவி, இயேசுவே எனது வாழ்வை மாற்ற வரம் தரும் என செயலால் மாறுவோமா?

**- கலாபூஷணம் செ.யோசப்பாலா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எது பிரிவினைவாதம்?

**தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கையைப் பின்பற்றும் மற்றும் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் சகல தரப்பினருக்கும் தடை விதிக்கும் பிரகடனத்தை இலங்கை மேற்கொள்ளும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருக்கின்றார்.**

**பிரிவினை வாதம் தடை செய்யப்படும் என்றால் எது பிரிவினை வாதம் என்பதே இங்கு கேள்விக்குரியது.**

***"மஞ்சள் காமாலைக்காரனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்"*** **– என்ற மாதிரி, தமிழர் தரப்பில் கோரப்படும் உரிமை எதுவென்றாலும் அது பிரிவினைவாதம் என்பதுதான் தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் கணிப்பு.**

**நாட்டின் அரசமைப்பில் 13ஆவது திருத்தமாக இடம்பெற்றுள்ள சட்ட ஏற்பாடுகளை – காணி, பொலிஸ் அதிகாரப் பகிர்வை – நடைமுறைப்படுத்தக் கோரினால் தனி நாடு கேட்பதாக அதைக் காட்டி துள்ளிக் குதிக்கும் பேரினவாதம்தான் இந்த நாட்டில் உள்ளது.**

**நாட்டின் அரசமைப்பில் சட்ட ரீதியாக உள்ளவற்றை நடைமுறைப்படுத்தக் கோருவதையே பிரிவினையாக அர்த்தம் பண்ணுவது தென்னிலங்கையின் சராசரி அரசியல்வாதிகள் மட்டுமல்லர், கற்றறிந்த புத்திஜீவிகள் மட்டுமல்லர், நாட்டின் ஜனாதிபதி வரை அப்படித்தான் கற்பிதம் பண்ணுகின்றார்கள்.**

**அதுவும் கூட சராசரி அரசியல் கூட்டங்கள், பொது நிகழ்வுகளில் மட்டுமல்ல, சர்வதேசத்துக்கு செய்தி சொல்லும் அறிவிப்புகளில் கூட இப்படி அதிகாரப் பகிர்வைப் பிரிவினையாகக் காட்டும் காமாலைக்கண் பார்வைதான் இலங்கையின் நிரந்தர நிலைப்பாடாக உள்ளது.**

**அரசமைப்பில் உள்ளவற்றை – 13ஆம் திருத்தமாக நாட்டின் உயர் சட்டத்தில் உள்ள விடயங்களை – நிறைவேற்றுங்கள் என்றுதான் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வில் இலங்கையிடம் தனது உத்தியோகபூர்வ கோரிக்கையாக முன்வைத்தது இந்தியா. ஒரு தடவையல்ல, அடுத்தடுத்து இரண்டு தடவைகள்.**

**அப்படி இந்தியா விடுத்த கோரிக்கையையே பிரிவினை என்று அர்த்தப்படுத்தியிருக்கின்றார் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**இந்தியாவின் பெயர் குறிபிட்டாமல் அவர் இதனைச் சுட்டியிருக்கின்றார்.**

***"அவர்கள் குறிப்பிடும் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வானது உண்மையில் பிரிவினைக்கான அழைப்பு. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லாதிக்க சக்திகளின் பலப் பரீட்சைக்கான களமாகத் தமிழர் தரப்பின் அதிகாரப் பகிர்வுக் கோரிக்கையை அவர்கள் பயன்படுத்த விழைகின்றனர். இது பிரிவினைக்கு வழி செய்கின்றது. அதற்கு இடம் கொடோம்."*** **– என்ற சாரப்படக் கூறி பீற்றியிருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.**

**ஆக, தமிழர்களின் உரிமைக்கான கோரிக்கை எதுவெனினும் அதனை 'பிரிவினைவாதம்' என்றே தென்னிலங்கைப் பேரினவாதச் சிங்களம் கூறுகின்றது, கூறப் போகின்றது.**

**அந்த அடிப்படையில்தான் தமிழ் மக்களை அது இனிக் கையாளப் போகின்றது என்பதும் வெளிப்படையானது.**

**தமிழர்களுக்கு உரிய அதிகாரப் பகிர்வை வழங்குங்கள் என்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் நீதி, நியாயமான கோரிக்கையையே 'பிரிவினைவாதம்' என்று சாயம் பூசி அறிவிக்கின்றது சிங்களம். அதன் ஆட்சித் தலைவரான அதி உத்தமரே அப்படி அறிவித்த பின்னர் நாட்டின் அரசும் அதன் நிர்வாகமும் இந்த விடயத்தை எப்படிக் கையாளப் போகின்றன என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.**

**தமிழர் உரிமைகளுக்காகக் குரல் எழுப்பும் பல தமிழ் அமைப்புக்கள் மற்றும் தமிழ்ப் பிரமுகர்களுக்கு எதிராகத் தடை விதிக்கும் உத்தரவுகளை கொழும்பு விடுத்த பின்னர் –**

**அந்தத் தடை நடவடிக்கையை விஸ்தரிக்கும் செயற்பாட்டில் கொழும்பு ஆட்சிப் பீடம் மும்முரமாக இருக்கையில் –**

**இவ்விடயத்தை ஒட்டி தமிழ் அரசியல் தலைவர்கள், பொது அமைப்பினர், ஊடகத்தினர், விமர்சகர்கள் போன்ற பலர் நெருக்குவாரங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்பது கண்கூடு.**

**இந்த நாட்டில் வசிக்கும் தமிழ் மக்கள் தமக்கு சமஷ்டி அடிப்படையிலான சுயாட்சி கேட்டுப் போராடுவது தவறு அல்ல, அது பிரிவினையாகாது, அப்படிப் போராட அவர்களுக்கு உரிமைகள் உள்ளன என்று இலங்கையின் உயர்நீதிமன்றம் தனது முன்னைய தீர்ப்பு ஒன்றில் வெளிப்படையாகக் கூறியிருக்கின்றது.**

**அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தத்தை முழு அளவில் நடைமுறைப்படுத்துங்கள் என்று கோருவதையே நாட்டின் தலைவரும் அவரது அரசும் பிரிவினை வாதமாக அர்த்தம் பண்ணி கூக்குரலிட்டும் போது, சமஷ்டி உரிமையைத் தமிழர்கள் கேட்டால் அது நிச்சயம் பிரிவினவாதமாக பௌத்த, சிங்கள ஆட்சிப் பீடத்தினால் அர்த்தம் பண்ணப்படும் என்பது தெளிவு.**

**இது விடயத்தில் அவர்கள் பேரினவாதக் காமாலை கண்ணர்கள். அதனூடாகக் காண்பவை எல்லாம் அவர்களுக்கு நிச்சயம் பிரிவினை ஆகவே தோன்றும்.**

# மாகாணசபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துக!

## பெரமுன வலியுறுத்தல்



எந்த வகையிலாவது மாகாண சபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துமாறும் அது எந்த முறையாக இருந்தாலும் தேர்தலை சந்திக்க நாம் தயாராகவே இருக்கிறோம் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாகாண சபை உறுப்பினர்கள் மன்றத்தின் தலைவர் காஞ்சன ஜயரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில் –

மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டு தற்போது 4 ஆண்டுகளாகின்றன. சகல மாகாண சபைகளின் உறுப்பினர்களது பதவிக்காலமும் முடிவடைந்துள்ளதுடன், மக்கள் பிரதிநிதிகள் இல்லாது அவை இயங்கி வருகின்றன. இது இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு கறையாகும்.

ஜனாதிபதி, பிரதமர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை அமைப்பதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய பஸில் ராஜபக்ஷ மூவருமே மாகாண சபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துமாறு கூறியிருந்தனர்.

மாகாண சபைத் தேர்தலை இரண்டு வழி முறைகளை கீழ் நடத்துவது தொடர்பாக அமைச்சரவை பத்திரமொன்றை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் அமைச்சரவையில் சமர்ப்பித்திருந்தார்.

அந்த பத்திரத்தை ஆராய வேண்டுமென கோரி ஒரு வார கால அவகாசம் கேட்டிருந்தனர். எனினும், தற்போது பல மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் இதற்கான முடிவு இதுவரையிலும் எடுக்கப்படவில்லை.

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இது தொடர்பான வாத விவாதங்கள் நடத்தாது, அதனை அங்கீகரிக்கப்படாது இந்த அமைச்சரவை பத்திரத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளனர்.

ஆகவே, கடந்த முறை அமைச்சரவை பத்திரத்துக்கு நடந்தது போன்று இம்முறையும் நடத்த வேண்டாமென, சகோதரக் கட்சிகளின் தலைவர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, தினேஷ் குணவர்தன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரிடம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

எந்த வகையிலாவது மாகாண சபைத் தேர்தலை கூடிய விரைவில் நடத்துங்கள். அது எந்த முறையாக இருந்தாலும் பிரச்சினையில்லை. தேர்தலை சந்திக்க நாம் தயாராகவே இருக்கிறோம். ஆகவே ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்துமாறு நாம் சகல தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கிறோம். – என்றார்.

# இந்தியாவின் நட்டுவாங்கத்துக்கு பரதம் ஆடுகின்றார் கோட்டாபய

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



இந்தியா முன்வைக்கும் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவிக்கின்றார் என மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

விரைவில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துமாறு இந்தியா ஏற்கனவே ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தியதாக அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இவ்வாறு இந்தியா முன்வைக்கும் கோரிக்கைகளை ஏற்பதைத் தவிர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வேறுவழி இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# அரசின் உள்ளக பிரச்சினைகள் தீராவிட்டால் அடுத்துவரும் தேர்தலில் பெரமுன தோற்கும்

## அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவிப்பு



அரசாங்கத்தின் உள்ளக பிரச்சினைகள் தீர்க்கப்படாவிட்டால், பொதுஜன பெரமுனவால் அடுத்த தேர்தலில் வெற்றிபெற முடியாது என இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கூட்டத்தில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அரசாங்கத்தின் மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை தற்போது குறைவடைந்து வருகின்றது.

அதாவது மக்கள் தற்போது, அரசாங்கத்தின் மீது அதிருப்தி வெளியிட ஆரம்பித்துள்ளனர். இவை தொடருமாக இருந்தால், பொதுஜன பெரமுன அடுத்த தேர்தலில் வெற்றி பெற முடியாத நிலைமை ஏற்படும்.

மேலும் மக்களால் ஆட்சிக்கு வந்த நாம், இன்று அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறோமா? அத்துடன் மக்களிடையே தற்போது சில பிரச்சினைகளும் குறைகளும் உள்ளன. எங்களுக்கு அது புரியவில்லை என்றால், நாங்கள் மேலும் கீழ்நோக்கிச் செல்வோம்.

இதேவேளை அடுத்த தேர்தல்களிலும் எவ்வாறு வெற்றி பெறுவது என்பது பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும்.

எங்களிடையே ஒற்றுமை இல்லாதிருந்தால், கடந்த தேர்தல் எளிதாக இருந்திருக்காது. நாங்கள் எவ்வாறு ஆட்சிக்கு வந்தோம் என்பதை மறந்துவிட்டால், அடுத்த தேர்தலில் நாம் வெல்ல முடியாது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். தொலைக்காட்சி ஊடகவியலாளரிடம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு விசாரணை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை மையமாக கொண்டு இயங்கும் தொலைக்காட்சி ஒன்றின் ஊடகவியலாளர் ஒருவரையே பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நேற்றுமுன்தினம் (திங்கட்கிழமை) கொழும்பிற்கு அழைத்து விசாரணை செய்த பின்னர் விடுவித்துள்ளனர்.

புலம்பெயர் நாட்டில் வசிக்கும் பயங்கரவாதச் செயற்பாட்டுடன் தொடர்புடையவர் என அடையாளப்படுத்தப்பட்ட நபருடன் ஊடகவியலாளர் முகப்புத்தகத்தில் நட்பில் இருந்தமை தொடர்பிலேயே விசாரணைக்கு அழைக்கப்பட்டு சுமார் மூன்று மணிநேர விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை அஞ்ச வைத்த ஜெனிவாத் தீர்மானம்




## சாள்ர்ஸ் எம்.பி. தெரிவிப்பு

ஐ.நா. மனித உரிமைப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கை அரசை அச்சம் கொள்ள வைத்துள்ளமையே புலம்பெயர் அமைப்புகள் மீதான தடைக்குக் காரணம் என நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

தமிழ்மக்கள், மீதும் புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் கடும்போக்கான, இனவாத செயற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

அதன்மூலம் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கை அரசை அச்சம் கொள்ளவைத்துள்ளதாகவே கருதமுடியும்.

எனினும் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தீர்வு கிடைக்கும் என்பது எனது நம்பிக்கையில்லை. எனினும் பலம்பொருந்திய உலகநாடுகள் தமிழர்கள் தொடர்பாக கரிசனையுடன் இருக்கின்றமை அதன்மூலம் வெளிப்படுகின்றது.

நான் வெளிவிவகார அமைச்சருடன் தனிப்பட்டரீதியில் கலந்துரையாடியிருந்தேன். ஐ.நா. பேரவையுடன் இணைந்து செயற்படுவதற்கு மனதளவில் அரசுக்கு இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

சிங்கள மக்கள் மத்தியில் இனவாத ரீதியான தோற்றப்பாட்டை ஏற்படுத்தினாலும், மனித உரிமைகள் பேரவையை மீறி அவர்களால் செயற்படமுடியாது. அந்தத் தீர்மானத்தை இங்கு நடைமுறைப்படுத்த முடியாது என்று அவர்கள் செயற்பட்டால் இலங்கை மேலும் பாதிப்பையே எதிர்நோக்கும். அவர்களது கடும்போக்கு தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தரும்.

குறிப்பாக இந்த ஆட்சியை அமைப்பதற்கு மூலகாரணமாகவிருந்த மக்கள் தற்போது அதிருப்தியில் இருக்கிறார்கள். எனவே, அவர்களின் மனங்களைச் சிந்திக்கவிடாமல் செய்வதற்காகவே வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களைக் கையாள்வதுடன், முஸ்லிம் மக்களின் சட்டரீதியான விடயங்களை முன்னிறுத்துவதனூடாக, அந்த மக்களை திருப்திப்படுத்தி வருகின்றார்கள். வெசாக் தினத்தை நயினாதீவில் செய்வதற்கும் அதுவே காரணம்.

தொல்பொருள் திணைக்களத்தின் ஆய்வுகளை நிறுத்தமுடியாது என்று தொடர்புடைய அமைச்சர் என்னிடம் கூறியிருந்தார்.

எனினும் இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக தொல்பொருள்துறை சார்ந்த விரிவுரையாளர்களையும் அழைத்து எதிர்வரும் 10 ஆம் திகதிக்குள் ஒரு கூட்டத்தை நடத்தி கலந்துரையாடுவதாகச் சொல்லியிருக்கின்றார்.

இதேவேளை, அரசுடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாக கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, எமது கட்சியின் ஊடகபேச்சாளர் என்று யாரும் இல்லை. அந்த பதவி கட்சியால் உத்தியோகபூர்வமாக இன்னும் நியமிக்கப்படவில்லை.

அத்துடன் தந்தை செல்வா காலம் முதல் அனைத்து அரசுடனும் பேச்சு செய்துகொண்டுதான் இருக்கிறார்கள்.

இலங்கை அரசால் தமிழர்களுக்கு தீர்வு வழங்குவதற்கான சாத்தியம் இல்லை. சர்வதேச நாடுகளும் குறிப்பாக இந்தியாவும் முழுமனதுடன் செயற்பட்டால் எமக்கு சாதகமாக இருக்கும்.

கடந்த வருடங்களில் இடம்பெற்ற தீர்மானங்களைவிட கடைசிதீர்மானத்தில் இந்தியாவினுடைய செயற்பாடு, தமிழ்மக்களுக்கு சாதகமாகவே இருக்கிறது.

கடந்த முறை அரசுக்கு சார்பான வகையில் பலநாடுகளுடன் இலங்கையை இணைக்கும் செயற்பாட்டையே இந்தியா முன்னெடுத்திருந்தது.

இம்முறை வாக்களிப்பில் நடுநிலைமை வகித்திருந்தாலும் தெளிவான விடயங்களை ஐ.நாவில் பதிவுசெய்திருக்கின்றது.

தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. அந்த இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். என்று ஓர் ஆசிய பிராந்தியத்தின் முக்கியமானநாடு, மனித உரிமைப்பேரவையில் தனது பதிவை வைத்திருப்பது எதிர்காலத்தில் தமிழர்களுக்கு சாதகமாகவே இருக்கும். – என்றார்.

## நிஷங்க சேனாதிபதியின் மீது விதித்த பயணத்தடை நீக்கம்

அவன்கார்ட் பிரைவேட் லிமிடெட் தலைவர் நிஷங்க சேனாதிபதி மீது விதிக்கப்பட்ட பயணத் தடையை கொழும்பு உயர் நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை நீக்கியுள்ளது

அவன்கார்ட் தலைவர் நிஷங்க சேனாதிபதி, முறையான உரிமம் இன்றி காலி கடற்கரையில்,எம்.வி.அவங்கார்ட் கப்பலில், தானியங்கி துப்பாக்கிகள் மற்றும் நேரடி வெடிமருந்துகளை வைத்திருந்தார் என அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.



ஆனாலும் மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக வெளிநாடு செல்ல வேண்டிய தேவை இருக்கின்றமையால், நிஷங்க சேனாதிபதி மீது விதிக்கப்பட்டுள்ள பயணத் தடையை இடைநீக்கம் செய்யுமாறு அவரது சட்டத்தரணி, உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கை விசாரணை நடத்தி வரும் மூவரடங்கிய நீதிபதிகள் கொண்ட குழு, சட்டத்தரணியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டதுடன் பயணத் தடையையும் நீக்கி உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் 23 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இயற்கை ஆபத்திலும் கூட ராஜபக்ஷ குடும்பத்தினர் பாதுகாக்கப்படுவர்

### சஷிந்திர எம்.பி. பெருமிதம்

ராஜபக்ஷ குடும்பத்தினர் நாட்டுக்கு செய்த சிறந்த சேவையின் காரணமாக இயற்கை ஆபத்திலும் கூட அந்தக் குடும்பம் பாதுகாக்கப்படும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சஷிந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி பிபில, மெதகம பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில், சஷிந்திர ராஜபக்ஷவின் ஜீப் அடித்துச் செல்லப்பட்டது. ஆனாலும்நாடாளுமன்றஉறுப்பினர் உட்பட ஏனையோர் உயிராபத்து ஏதுமின்றி பாதுகாப்பாகத் தப்பினர்.

இந்நிலையில் குறித்த விபத்து தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மொனராகலைப் பகுதியில் கட்ட முடியாத ஒரே பாலத்தால்தான் நான் காயமடைந்திருந்தேன். இருப்பினும், கடவுளின் துணை இருந்தமையால் எனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடிந்தது.

மேலும் ராஜபக்ஷ குடும்பத்தினர், நாட்டுக்குச் செய்த சேவையின் காரணமாக, இயற்கை ஆபத்திலும் கூட பாதுகாக்கப்படுவர்.

இதேவேளை, தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளராக இருந்த காலத்தில் படுகொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அதிலிருந்தும் கூட அவரால் தப்பிக்க முடிந்தது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மக்களுக்கு சலுகைகளை வழங்குக அரசுக்கு எதிர்க்கட்சி கோரிக்கை!

வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துவதில் கடும் சிரமங்களை எதிர்கொள்ளும் மக்களுக்கு சலுகைகளை வழங்குமாறு எதிர்க்கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.



கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க இந்த கோரிக்கையை விடுத்தார்.

மேலும் எதிர்வரும் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னதாக அத்தியாவசியப் பொருள்களின் விலையை அரசாங்கம் குறைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே பொது மக்களின் சுமையைத் தணித்ததாகவும், ஆட்சிக்கு வந்த முதல் 100 நாள்களில் சலுகைகளை வழங்கியதாகவும் கயந்த கருணாதிலக்க சுட்டிக் காட்டினார்.

ஆகவே பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கம் கவனமாக இருக்க வேண்டும் என்பதோடு தகுந்த முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

## புற்றுநோயை ஏற்படுத்தும் தேங்காய் எண்ணெய்; இறக்குமதிக்குக் காரணமானவர்களுக்கு தூக்கு!

### பொதுஜன பெரமுன அதிரடி



கொழும்பு, மார்ச் 31

மக்களுக்கு புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய தேங்காய் எண்ணெய், இறக்குமதி செய்யப்பட்டுள்ளமையால் அதனுடன் தொடர்புடைய அனைவரும் தூக்கிலிடப்பட வேண்டுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் மாதிரிகளில் புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய எப்லடொக்சின் காசினோஜென் என்ற இரசாயனம் அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே இந்த விவகாரம் தொடர்பாக, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கூட்டத்தில் வீரசுமன வீரசிங்க மேலும் கூறியுள்ளவை வருமாறு –

இந்த தேங்காய் எண்ணெய் எவ்வாறு நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்பது கண்டறியப்பட்டால் அதனுடன் தொடர்புடையவர்களை தூக்கிலிட வேண்டும்.

தேங்காய் எண்ணெய் என்பது நாம் நேரடியாக உட்கொள்ளும் ஒரு பண்டமாகும்.

ஆகவே, பெரும்பாலானோருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதமாக செயற்பட்ட சந்தேகநபர்கள் அனைவரையும் தூக்கிலிட வேண்டும். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியசாலை மற்றும் பாடசாலைக்கு சாணக்கியன் கண்காணிப்பு விஜயம்





மட்டக்களப்பு,மார்ச் 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நேற்று வைத்தியசாலை மற்றும் பாடசாலைக்கு கண்காணிப்பு விஜயம் செய்திருந்தார்.

பொதுமக்களின் கோரிக்கைக்கு அமைவாகவே களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை மற்றும் பட்டிருப்பு தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடி ஆகிய இடங்களுக்கு கண்காணிப்பு விஜயம் செய்திருந்தார்.

அங்கு காணப்படும் பிரச்சினைகள் மக்கள் மற்றும் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், வளப்பற்றாக்குறை என்பவற்றை இரா.சாணக்கியன் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன், இதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு துரிதமாக மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு ஆராய்ந்திருந்தார்.

இதேவேளை, எதிர்வரும் காலங்களில் இவ்வாறான திடீர் விஜயங்களை மக்கள் நலன் சார்ந்து மேற்கொள்ளலாம் என தீர்மானித்துள்ளதாகவும் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

# எரிபொருள் விலையை அதிகரிக்க அரசுக்கு அதிகாரம் கிடையாது

## என்கிறார் கபிர் ஹாசீம்



எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் கிடையாது.

2019, 2020 ஆம் ஆண்டுகளில் உலக சந்தையில் பெற்றோல் மற்றும் டீசல் விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்தபோது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் பெற்றுக்கொண்ட 25 ஆயிரம் கோடி ரூபா இலாபத்தின் மூலம் தற்போதேனும் நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபிர் ஹாசீம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கத்துக்கு அதிகாரம் கிடையாது. கொவிட் காலத்தில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு இலாபம் கிடைக்கப்பெற்றது.

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் எண்ணெயில் 70 வீதமானவை சுத்திகரிக்கப்பட்டவையாகும். 30 வீதம் மாத்திரமே மசகு எண்ணெய்யாகும்.2019 நவம்பர் 19 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியைப் பொறுப்பேற்ற அன்றைய தினம் பெற்றோல் தாங்கியொன்றை இறக்குமதி செய்வதற்கு 71.47 டொலர் மாத்திரமே செலவிடப்பட்டது.

அன்று இலங்கையில் பெற்றோர் லீற்றர் 137 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது. 2020 ஏப்ரல் 20 ஆம் திகதி பெற்றோல் தாங்கியொன்றின் விலை 18 டொலராக வீழ்ச்சியடைந்தது. இது பாரியதொரு விலை வீழ்ச்சியாகும்.

இதன்போதும் இலங்கையில் பெற்றோல் லீற்றர் 137 ரூபாவிற்கே விற்பனை செய்யப்பட்டது. இந்த காலக்கட்டத்தில் அரசாங்கத்திற்கு பெற்றோல் லீற்றரொன்றுக்கு 120 ரூபா இலாபம் கிடைக்கப்பெற்றது.

இதேபோன்று 2019 இல் டீசல் தாங்கியொன்றின் விலை 74 டொலராகவே காணப்பட்டது. எனினும் இலங்கையில் ஒரு லீற்றர் டீசல் 104 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

2020 ஏப்ரலில் டீசல் தாங்கியொன்றின் விலை 28 டொலராக வீழ்ச்சியடைந்தது. எனினும் இதன் போதும் இலங்கையில் பழைய விலைக்கே டீசல் விற்பனை செய்யப்பட்டது.

உலக சந்தையில் 2020 ஏப்ரல் முதல் டிசெம்பர் வரை பெற்றோல் விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருந்த போதிலும் இலங்கை மக்களுக்கு அதன் பயன் கிடைக்கப்பெறவில்லை.

கொவிட் காலத்தில் எரிபொருள் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் அரசாங்கத்துக்கு 25 ஆயிரம் கோடி ரூபா இலாபம் கிடைக்கப் பெற்றது.

இந்த இலாபத்தை சேமிப்பிலிட்டு உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிக்கும்போது, இலங்கையின் விலையை அதிகரிக்காமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எனினும், தற்போது எரிபொருள் விலையை அதிகரிக்க நேரிடும் என்று அவரே கூறுகின்றார். எனவே, இவ்வாறான பின்னணியில் எரிபொருள் விலையை அதிகரிக்க எவ்வித அதிகாரமும் கிடையாது என கபிர் ஹாசீம் தெரிவித்தார்.

# காட்டு யானை பிரச்சினைக்கு தீர்வு கோரி மக்கள் திரண்டு வீதிமறியல் போராட்டம்



திருகோணமலை ,மார்ச் 30

காட்டு யானை பிரச்சினைக்குத் தீர்வு கோரி நேற்று (30) திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கண்டி– திருகோணமலை பிரதான வீதியின் 98ஆம் கட்டை சந்தியில், வீதியை மறித்து, அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

உரியவர்களுக்கு பலமுறை அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை எனவும் யானை வேலி அமைக்காமை குறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தங்களது கோஷங்களை எழுப்பினர்.

இந்த வீதி மறியல் போராட்டத்தால், கண்டி – திருகோணமலை பிரதான வீதியின் போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் வரை தடைப்பட்டிருந்தது.

எனினும், போராட்ட இடத்துக்கு பொலிஸ் உயரதிகாரி வருகை தந்து, போராட்டத்தில் ஈடுபட்ட விகாராதிபதியுடன் பேசியதற்கு இணங்கவும் உரிய அரச உயரதிகாரி ஒருவருடனான அலைபேசி உரையாடலையடுத்தும் மக்கள் வீதியை விட்டு சற்று விலகி, வாகனப் போக்குவரத்துக்கு இடம் கொடுத்தனர்.

## குருக்கள்மடத்தில் வேலியை உடைத்து விபத்துக்குள்ளான பட்டாரக வாகனம்

மட்டக்களப்பு,மார்ச் 30

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருக்கள்மடம் பிரதான வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளதுடன் வாகனத்திற்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பகுதியிலிருந்து கல்முனை நோக்கி சென்று கொண்டிருந்த பட்டாரக வாகனம் ஒன்று மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியின் குருக்கள்மடத்தில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் அருகிலிருந்த வீட்டு வேலியில் மோதியுள்ளது. இதனால் வீட்டு வேலி உடைந்து சேதமடைந்துள்ளதுடன், குறித்த வாகனமும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில் வாகனத்தில் பயணித்த சாரதி உட்பட இரண்டுபேரும் சிறு காயங்களுக்கிலக்காகி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிகுடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## புற்றுநோய் ஏற்படுத்தும் தேங்காய் எண்ணெய்; ஆய்வு மேற்கொள்ள நீண்ட காலம் தேவை!

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 31

அஃப்லாடொக்ஸின் இரசாயனம் கலக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்ற தேங்காய் எண்ணெய் தொடர்பாக ஆய்வு மேற்கொள்வதற்கு, நீண்ட காலம் தேவைப்படுமென பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தேங்காய் எண்ணெயில் புற்றுநோய் ஏற்படுத்தக்கூடிய அஃப்லாடொக்ஸின் இரசாயனம் கலக்கப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்குத் தேவையான ஆய்வு வசதிகள் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தில் மாத்திரமே காணப்படுகின்றமையே இதற்குக் காரணமாகுமென அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே நாடு முழுவதிலும் சேகரிக்கப்படுகின்ற எண்ணெய் மாதிரியை உடனடியாகப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திகொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டுமெனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை குறித்த எண்ணெய் மாதிரியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அஃப்லாடொக்ஸின் இரசாயனம் இருக்கின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள 8 மெற்றிக் தொன் எடைகொண்ட குறித்த எண்ணெய்யை மீள ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சுங்க பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் விஜித ரவிபிரிய குறிப்பிட்டுள்ளார்.

# பொலிஸ் மிருகத்தனத்தை மன்னிக்கப் போவதில்லை

## பகிரங்கமாகக் கூறினார் அமைச்சர்



பொலிஸ் மிருகத்தனத்தை எந்த வகையிலும் மன்னிக்கப் போவதில்லை என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பன்னிப்பிட்டி பகுதியில் லொறி சாரதியை தாக்கிய பொலிஸ் அதிகாரி மீது சட்ட நடவடிக்கை எடுக்க தான் பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொண்டதாகவும் அவர் கூறினார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற வாராந்திர அமைச்சரவை ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், உலகம் முழுவதும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெரும் நிலையில் அரசைக் குறை கூற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்காவில் கடந்த ஆண்டு பொலிஸ் அதிகாரியால் ஒரு கறுப்பினத்தவர் கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவத்தின்போது அமெரிக்க அரசை எவரும் குறை கூறவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அண்மையில் பயணப் பொதிக்குள் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் பெண்ணொருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவத்திலும் அரசு இதனையே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ் மொழிக்கல்வி இயக்குநர்,
மெல்பேண், ஆஸ்திரேலியா



# பக்தி இயக்கத்தின் முன்னோடியாய் மிளிர்ந்த தமிழ் தந்த செல்வி காரைக்கால் அம்மையார்

உலகிலே பல மொழிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மொழியும் முக்கியமான மொழிகள்தாம். ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு விதமான சிறப்பு இருக்கிறது. ஆனால் எந்த ஒரு மொழிக்குமே இல்லாத சிறப்பினை உலகில் எங்கள் தமிழ் மொழி பெற்றிருக்கிறது. அந்தச் சிறப்புத்தான் பக்தி இலக்கியம் என்னும் சிறப்பாகும். பக்தி என்பது - இலக்கியமாக எழுந்திருப்பது உலகமொழிகளில் தமிழ் மொழியில் மட்டுமே என்பதை எல்லா மொழியியல் அறிஞர்களுமே ஏற்றுக் கொள்ளுகிறார்கள். அந்த அளவுக்கு தனித்துவமாய், வளர்ந்து யாவரும் வியக்கும் வண்ணம் பக்தி இலக்கியம் தமிழில் அமைந்திருக்கிறது என்பது தமிழருக்கெல்லாம் மிகவும் பெருமை.

பக்தி இலக்கிய வரலாற்றை எடுத்து நோக்கினால் தமிழகத்திற்கு தனித்ததொரு இடமுண்டு. சைவ நாயன்மார்களும், வைஷ்ணவ ஆழ்வார்களும் உவந்தளித்த பக்தி இலக்கியத்தால் எங்கள் தமிழ் மொழி பக்தியின் மொழி என்னும் சிறப்பினைப் பெற்றது என்பது மறுக்கமுடியாத உண்மை. இவர்களின் அருட்பாடல்களால் பக்தி இலக்கியம் தமிழின் தமிழ்ச் சமூகத்தின் பெருஞ் சொத்தாக ஆகிவிட்டது.

சைவ பக்தி இலக்கியத்தின் எழுகின்ற ஞாயிறாக விளங்குவர் காரைக்கால் தந்த தவப்புதல்வி, தமிழ்ச் செல்வி, புனிதவதியாகிய காரைக்கால் அம்மையார் ஆவர். சிவஞானச் செந்திருவான இவ்வம்மையார் சைவத் திருமுறைகளின் தோற்றுதல்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆன்ம ஞானத்தை, ஆன்ம சுதந்திரத்தை, ஆன்ம முக்தியை பெற்று பெண் குலத்துக்கே பெருமையினைத் தேடித்தந்தவராக இவ்வம்மையார் திகழுகிறார்.

சைவசமயம் போற்றும் அறுபத்து மூன்று நாயன்மார்களில் மூவர் மட்டுமே பெண்களாக இருக்கிறார்கள். அவர்களுள் மூத்தவராய், தலையானவராய் இருப்பவர் காரைக்கால் அம்மையார். மற்றைய பெண்களை விட காரைக்கால் தந்த தமிழ்ச் செல்வி யாவற்றிலும் முன்னிற்பவர் ஆகிறார். இவ்வம்மையாரைப் பன்முக நோக்கிலே தான் பார்க்க வேண்டி இருக்கிறது.

தத்துவச் செறிவு மிக்கார். மெஞ்ஞான உணர்வு மிக்கார். சமயசாதனை மிக்கார். இலக்கியச் சாதனை மிக்கார் - என்று இவரின் நோக்கு பரந்து விரிந்து சைவ பக்தி இலக்கியத்துக்கு வெளிச்சமாய் நிற்கிறது.

அதிசயங்கள் இல்லாமல் பிறந்த அம்மையார் அனைவரும் மெச்சும் ஆன்மீக அதிசயமாகிறார். சித்துக்கள் அறியாத அம்மையார் சிந்தனைகளை விதைத்த பெரும் சித்தராகவே ஆகிறார் சைவபக்தி உலகில். சாதாரண பெண்ணாக வளர்ந்து, சாதாரணமாகவே இல்லறவாழ்வில் இணைக்கப்படுகின்றார். இல்லறத்தில் நல்லறம் விளையும் வண்ணம் வாழ்ந்தவரின் வாழ்வில் ஆண்டவன் அருள் பாய்ந்து அவரின் கோலம் மாறுகிறது. குடும்பம் மாறுகிறது. சைவ பக்தி உலகுக்கு தத்துவஞான முத்துக் கிடைக்கிறது. இது காரைக்காலில் வந்து பிறந்த ஏனைய பெண்களுக்கு வாய்க்கவில்லை. இவருக்கு மட்டுமே வாய்த்திருக்கிறதென்றால் திருவருள் என்பது கருவிலேயே வந்து அமர்ந்து விட்டது என்றுதான் கருதத் தோன்றுகிறது. மாங்கனியின் வருகை ஒரு மங்கையின் வாழ்வையே பக்திக்குள் புகுந்துவிட வைக்கிறது! மாங்கனியால் மானிலத்துக்கே ஆன்மீக அம்மையாய் ஆகிவிடுகிறார் காரைக்கால் ஈந்த புனிதவதியான தமிழ்ச்செல்வி!

காரைக்கால் தந்த ஆன்மீக முத்து சைவ பக்தி இலக்கியத்தின் முன்னோடியாக விளங்கினார் என்பதற்கு அவரின் பரந்துபட்ட செயற்பாடுகளே அரணாகி நிற்கின்றன. கோவில்களில் இருக்கின்ற நாயன்மார்களின் சிலைகள் நின்றபடியே இருக்க காரைக்கால் அம்மையார் சிலை மட்டும் இருந்தபடி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். மற்றவர்கள் எல்லாம் நிற்க இவர் மட்டும் இருக்கும் வண்ணம் சிறப்புற்றதற்குக் காரணந்தான் என்ன?

மாங்கனியை இறைவனிடம் பெற்றதாலா? பேயுடலுடன் கயிலை மலையில் தலையால் நடந்து அதிசயம் புரிந்ததாலா? புலமையில் சிறந்து விளங்கியதாலா? தியாகங்களைச் செய்தலாலா? அப்படியெல்லாமெண்ணிப் பார்க்கையில் அம்மையாரை விட பல செய்தவர்கள் இருந்திருக்கிறார்கள். அப்படி இருக்க இவருக்கேன் இப்படிச் சிறப்பென்றால் இவர் தோன்றி இருக்காவிட்டால் சைவமும் இல்லை, மற்ற சிவன் அடியார்களும் இல்லை என்பதனாலாகும் என்பது பல பெரியோர்களின் கருத்து.

இவள் நம்மைப் பேணும் அம்மை என்று முழுமுதற் கடவுளான சிவனே செப்பியதாகக் கூறப்படுகிறது. உண்மையில் சைவத்தைப் பேணிய தாய்! சைவத்துக்கு ஒரு திட்டமான வடிவம் கொடுத்து அது ஒரு தனிப்பெருஞ் சமயமாக வளர்வதற்கான அடித்தளம் இட்டவர் அம்மையார் அவர்களேயாவர். சமணமும் சாக்கியமும் சைவத்தை நிலைகுலையச் செய்யாமல் சைவத்தை தலைநிமிரச் செய்தவர், சைவம் நிலைபெறச் செய்தவர் காரைக்கால் அம்மையார் என்பதனாலேயே அவர் முக்கியத்துவப் படுத்தப்படுகிறார். முன்னிலையில் அமர்ந்திருக்கிறார். எந்த ஒன்றும் தாயின் வயிற்றில்த்தான் பிறக்க வேண்டும் என்பதை நாமனைவரும் அறிவோம். முழுத்தன்னை பெற்ற சைவம் என்ற ஒன்று, சிவ வழிபாடு என்ற ஒன்று , காரைக்கால் அம்மையாராகிய தாய் வயிற்றில் பிறந்ததாகும் என்பதை மனமிருத்தல் அவசியமாகும். தமிழ் நாட்டில் சைவத்தைக் காத்திட்ட பெருமை காரைக்கால் அம்மையாரையே சாரும் எனலாம். அவர் போட்டுக் கொடுத்த பாதையில் தான் பின் வந்த அடியார்கள் செப்பமாய் செல்ல முடிந்தது. தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவனாய் ஆவதற்கு முதலடி எடுத்து வைத்தவர் என்னும் நிலையில் காரைக்கால் தந்த தமிழ்ச்செல்வி புனிதவதி அம்மையார் திகழுகிறார்.

சைவசமயத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் அடித்தளமாய் இருந்த காரைக்கால் அம்மையார் தமிழ் இலக்கியத்திலும் பக்திலக்கிய முன்னோடியாக மிளிர்கிறார். சங்க இலக்கியம் காதலையும், போரையும் கருவாய் கொண்டு மகிழ்ந்தது. காப்பியங்கள் சாதனை புரிந்த தலைவர்கள் புகழ்பாடி போற்றும் வகையில் எழுந்தன. ஆனால் பக்தி எனும் பாதையில் மலர்ந்த பக்தி இலக்கியங்களோ மானுடக் காதலை , மனிதனைப் புகழ்ந்து பாடுவதை விடுத்து, இறைகாதலையும் , பரமான்வாவையும் பாடுவனவாகவும், இறை தொடர்பினைத் தேடுவனவாகவுமே மலர்ந்தன எனலாம். இவ்வாறு மலர்ந்த பக்தி இலக்கியத்தில் சிறப்பாக சைவபக்தி இலக்கியத்தின் முன்னோடியாகக் காரைக்கால் அம்மையார் திகழ்கிறார். நாயன்மார்களுக்குக் காலத்தால் முற்பட்ட இவ்வம்மையார் தமிழ் இலக்கியத்தில் பல இலட்சியப் புதுமைகளைச் செய்து பக்திலக்கிய முன்னோடியாக விளங்குகிறார் என்பதை தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வாளர்கள் அனைவருமே ஏற்று நிற்கின்றார்கள்.

அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்பன அம்மையார் தமிழ் இலக்கியத்துக்கு அளித்த மிகப் பெருங் கொடைகள். முதல் ஆழ்வார்களின் பங்களிப்பும் அம்மையாரின் பங்களிப்பும் பல்லவர் காலத்தில் பக்திப் பாடல்கள் தோன்றுவதற்கு விடிவெள்ளியாய் அமைந்தாலும் - பல்லவர்கால இலக்கியக் போக்கினுக்கு வழிகாட்டிய பெருமையினை அம்மையாரே பெற்றுக் கொள்ளுகிறார். அந்த வகையில் அம்மையாரின் பிரபந்தங்கள் விளங்குகின்றன என தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் வியந்து போற்றுகின்றனர். இந்த ரீதியில் காரைக்கால் தந்த தமிழ்ச்செல்வி காரைக்கால் அம்மையார் தமிழகத்துப் பெரும்புலவர் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறப்பு வாய்ந்த தமிழிலக்கியப் படைப்பாளியாக விளங்குகிறார்.

நூற்று நாற்பது செய்யுட்களே காரைக்கால் அம்மையாரின் இலக்கிய வெளிப்பாடாய் கிடைத்திருக்கின்றன. நான்கு சிறிய பிரபந்தங்கள் வாயிலாக இப்பாடல்கள் வந்திருக்கின்றன. குறைந்த அளவில் இலக்கியத்தில் இணைந்து நிற்கும் இவரை பெரும்புலவர் என்று எப்படிக் கருத முடியும்? அப்படி எண்ணுமளவுக்கு அம்மையாரின் இலக்கிய ஆளுமைதான் என்ன? என்று சிந்திக்கத் தோன்றுகிறதல்லவா. இலக்கியத்தரம் என்பது எண்ணிக்கையால் வருவதுதல்ல. இலக்கியத்தைப் படைத்தசிறப்பினைக்கொண்டேதீர்மானிக்கப்படுகிறது. அந்த வகையில் அம்மையாரின் ஆற்றல் அவரை உன்னத நிலையில் காணவே வைத்திருக்கிறது.

(11ஆம் பக்கம் பார்க்க...)

## புனிதவதி புகழ்பாடி பூஜிப்போம் வாரீர்!

**அழகான பெண்ணுருவை அவர் விரும்பவில்லை
அழகற்ற பேயுருவை அவர் விரும்பியேற்றார்
ஆண்டவனை மட்டுமே அழகென்று நினைத்தார்
அவனடியைப் பற்றுவதில் அக்கறையாய் இருந்தார்**

**தேமதுரத் தமிழதனை தேர்ந்துமே எடுத்தார்
பாமாலை பலபுனைந்து பக்திமய மானார்
தமிழ்ப்பக்தி மார்க்கமதில் தான் தொடக்கமானார்
அவர்போட்ட பாதையிலே அடியார்கள் நடந்தார்**

**நாளுமே இறையடியில் அம்மையார் இருந்தார்
நாயன்மார் வாழ்வினுக்கு முதலாக நின்றார்
பேயாடும் சுடலையிலே பெருமானைக் கண்டார்
பேயுருவை தேர்ந்தெடுத்து பெரும்பேறு பெற்றார்**

**இல்லறத்தில் இணைந்தாலும் இறைநலத்தை ஏற்றார்
நல்லறமாய் இறைநலத்தை நாளுமவ ரெடுத்தார்
சொல்லறத்தை வல்லமையாய் பாவாலே கொடுத்தார்
தொல்லுலகில் அம்மையார் உயர்வுநிலை பெற்றார்**

**காரைக்கால் அம்மையார் வணங்கும் நிலையுற்றார்
கற்சிலையாய் அவருவை எடுத்துவூர் சென்றார்
புலம்பெயர்ந்த நாடுகளில் அவருயர்ந்து நின்றார்
புலனடக்கி இறையுணர்வை பெற்றவராய் மிளிர்ந்தார்**

**பக்திமொழி எதுவென்று பார்க்கின்ற பொழுது
சத்தியமாய் தமிழென்றே சகலருமே சொல்வார்
அம்மொழியில் இலக்கியத்தை பக்திவழி செல்ல
ஆரம்பித்த பெருமையினை அம்மையார் பெறுவர்**

**காரைக்கால் புனிதவதி கன்னித்தமிழ்ச் செல்வி
கடவுளினால் அம்மையென அழைத்திட்ட மாது
புதுக்கருவை இலக்கியத்தில் புகுத்திவிட்ட அம்மை
புனிதவதி புகழ்பாடி பூஜிப்போம் வாரீர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# இராஜதந்திரிகளின் முறையற்ற செயற்பாடே ஜெனிவா நெருக்கடிக்குக் காரணம் ஆகும்

## கபீர் ஹாஸிம் குற்றச்சாட்டு



வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு தகுதியுடைய பொருத்தமான அதிகாரிகளை நியமிக்காது, அரசாங்கத்தின் தேவைக்கேற்ப நியமனங்கள் வழங்கப்பட்டதன் விளைவே ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டமையாகும்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கை இராஜதந்திர பிரதிநிதிகள் முறையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் ஜெனிவா நெருக்கடியை தவிர்த்திருக்க முடியும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

இலங்கை சுயாதீனமான ஒரு இராச்சியமாகும். அதன் இறையாண்மையை பாதுகாப்பதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

தேசிய பாதுகாப்பு மற்றும் தேசிய பொருளாதாரம் தொடர்பில் பெரிதளவில் பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது அந்த இரண்டு விடயத்திலுமே தோல்வியடைந்துள்ளார்.

தேசிய பொருளாதாரத்தினடிப்படையில் அவதானிக்கும்போது தற்போது இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய்யின் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. தேசிய ரீதியில் மாத்திரமன்றி தற்போது இராஜதந்திர மட்டத்திலும் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு உரிய அதிகாரிகளை நியமிக்காது அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிப்பவர்களின் உறவினர்களையும் நண்பர்களையும் நியமித்தமையின் விளைவே ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டமையாகும்.

இப்பிரேரணையை வெற்றி கொள்வதற்கு வெளிநாடுகளிலுள்ள இலங்கை பிரதிநிதிகள் முறையான நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

இலங்கைக்கு எதிராக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் குரல் கொடுக்கவில்லை. தற்போதைய அரசாங்கம் ஆட்சியை பொறுப்பேற்றதன் பின்னர் நாட்டு மக்களின் சிவில் உரிமைகள் நீக்கப்பட்டமை, ஜனநாயகம் சிதைவடைந்தமை, அரசியல் கட்சிகள் பழிவாங்கப்பட்டமை, ஊடக சுதந்திரம் பாதிக்கப்பட்டமை, நீதிமன்ற சுயாதீனத்தன்மை இல்லாதொழிக்கப்பட்டமை உள்ளிட்ட பிரச்சினைகளே ஜெனிவாவில் அதிகளவில் தாக்கம் செலுத்தின.

இந்த பிரச்சினைகள் அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டிருக்காவிட்டால் ஜெனிவா நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்க வேண்டியேற்பட்டிருக்காது. - என்றார்.

# தென்மராட்சியில் இழுத்துமூடும் அபாயத்தில் 30 பாடசாலைகள்!

யாழ். தென்மராட்சி பிரதேசத்தில் மாத்திரம் அறுபது பாடசாலைகளில் முப்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இழுத்து மூடப்படும் அபாயநிலை காணப்படுகின்றன என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் யோ.ஜெயக்குமார் எச்சரித்துள்ளார்.

அண்மையில் மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற ஆண்டு விழா நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இத்தகவலை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பாலர் பாடசாலைகள் மற்றும் ஆரம்ப பாடசாலைகளில் இணையும் மாணவர் தொகை வெகுவாகக் குறைவடைந்துள்ளது.

மீசாலை கிழக்கில் உள்ள ஆரம்ப பாடசாலை ஒன்றில் இவ்வருடம் முதலாம் தரத்திற்கு ஒரு மாணவர் கூட இணையவில்லை.

இது எதிர்காலத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். தற்சமயம் இலங்கையில் கல்வி அமைச்சு ஓர் அறிவித்தலை விடுத்துள்ளது.

அதாவது இருநூறு பிள்ளைகளுக்கும் குறைவாகக் காணப்படும் பாடசாலைகளை மூடுவது தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அறுபது பாடசாலைகளில் 54 பாடசாலைகளே தற்சமயம் இயங்கி வருகின்றன.

ஆறு பாடசாலைகள் சில பல காரணங்களால் ஏற்கனவே மூடப்பட்டு விட்டன. பொறுப்புவாய்ந்த கல்வி அதிகாரி ஒருவரின் தகவலின் படி தென்மராட்சியில் முப்பது பாடசாலைகளில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களே கல்வி பயில்கிறார்கள்.

கல்வி அமைச்சின் யோசனை நடைமுறைக்கு வருமானால் தென்மராட்சி பிரதேசத்தில் மாத்திரம் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகளை மூட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படும்.

ஒரு பாடசாலையை தீர்மானம் நிறைவேற்றி மூடுவது சுலபம். ஆனால் அதே பாடசாலையை ஆரம்பிப்பது மிகமிகக் கடினமான செயற்பாடு.

அத்துடன் தென்மராட்சியில் குறைந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகள் சிலவற்றை அருகில் இருக்கும் பாடசாலைகளுடன் இணைக்கும் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அதனை நாம் தொடர்ச்சியாக எதிர்த்து வருகிறோம். – என்றார்.

# இறுதி யுத்தம் தொடர்பான இரகசிய ஆவணம் பிரித்தானியா வசம் உள்ளதென்கிறார் பீரிஸ்!

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் பிரித்தானியாவிடம் இரகசிய ஆவணமொன்று இருப்பதாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கல்வி அமைச்சரும் சட்ட மேதையுமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் புதிய தகவலொன்றை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அத்துடன் பிரித்தானியாவிற்கு ஒரு சட்டமும் இலங்கைக்கு ஒரு சட்டமும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமுல்படுத்தப்படுவதாகவும் சாடியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் கருத்துத் தெரிவித்த அவர் –

எமது நாட்டை இலக்கு வைத்து ஐ.நா கட்டமைப்பின் சட்டங்களை மீறிக் கொண்டுவரும் நடவடிக்கைகளை நாம் நிராகரிப்பதுடன், எமது நாட்டுக்கு ஆதரவளித்த நாடுகளுடன் இணைந்து எமது நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எமது நாட்டிற்கு ஒரு சட்டமும் பிரித்தானியாவுக்கு இன்னுமொரு சட்டமுமே உள்ளன. போரின் இறுதிக்கட்டம் குறித்து உண்மையைக் கண்டறிய 2 கோடியே 80 லட்சம் டொலர்களை செலவழிப்பதற்கு பிரித்தானியாவிற்கு எந்த அவசியமும் இல்லை. அவர்களிடமே சாட்சியங்களும் உள்ளன. போரின் இறுதிக்கட்டத்தில் 2009 ஜனவரி முதலாம் திகதி முதல் மே 19ஆம் திகதிவரை முழுமையான அறிக்கையொன்றை பிரித்தானிய அதிகாரி ஒருவர் தயாரித்துள்ளார்.

அவர் கொழும்பில் பிரித்தானிய உயர்தூதகர் அலுவலகத்தில் பணிபுரிந்தவர். போரின் நடவடிக்கை தொடர்பாக முழுமையான அறிக்கையை பிரித்தானியாவுக்கு அனுப்பிவைக்க அவருக்கு வழங்கப்பட்ட கடமையாகும். அன்டன் கேஷ் என்ற குறித்த நபர் ஸ்ரீலங்கா தொடர்பாக பொறுப்புடையவர் அல்லர். அவர் பிரித்தானிய தூதரகத்தில் பணிபுரிந்தவர்.

அவரின் கடமை பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு தெளிவான அறிக்கையை வழங்குதலாகும். அவர் இதனை சரியாக செய்தார். அறிக்கை இன்றும் உள்ளது. குறித்த அறிக்கையில் எந்த குற்றமும் படையினரால் இழைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச சட்டத்தின் முன் எந்த பிழையும் ஏற்படவில்லை என அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

அந்த அறிக்கையை மறைப்பதற்கு அத்தனை முயற்சிகளும் எடுக்கப்பட்டன. இலங்கை தொடர்பான விவகாரம் பற்றி பேசுகையில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இப்படிப்பட்ட பெறுமதியான சாட்சிய மடங்கிய அறிக்கையை சமப்பிக்க வேண்டும். அத்துடன் நெய்ஸ்பி பிரபு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் பேசிய போது உண்மையை அம்பலப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தார்.

பிரித்தானிய தகவல் உரிமை சட்டத்தின்படி அவர் மனுவொன்றை முன்வைத்த போது அதனை அந்நாட்டு அரசாங்கம் நிராகரித்துவிட்டது. 3 வருடங்கள் இதற்காக முயற்சித்த போதிலும் அறிக்கை முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆகவே இதன் உண்மை நிலைவரம் என்ன? உண்மையை மூடிமறைக்கவும், அந்த நாடுகளின் குறுகிய அரசியல் நோக்கங்களை அடைந்துகொள்ளவும் இலங்கை மீது இவ்வாறு நடவடிக்கை எடுக்கின்றனர்.



தாருஸ்மன் என்பவர் ஐ.நா. பொதுச் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர். குறித்த அமைப்பானது தனக்கு ஆலோசனை வழங்கவே நியமிக்கப்பட்டதாக பான் கீ மூன் என்னிடம் தொலைபேசியில் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு எதிராக 4 ஆயிரம் சாட்சியங்களைப் பெற்றுக்கொண்டதாகவும் 2 ஆயிரத்து 300 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டதாகவும் சாட்சியங்களை இரகசியமாக பாதுகாப்பதாகவும் அது 2031ஆம் ஆண்டு வரை அமுலில் இருக்கும் என்றும் தாருஸ்மன் தெரிவித்திருக்கின்றார்.

ஆகவே இந்த விடயத்தை குறுகிய அரசியல் இலாபத்தை விட்டு நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் நாட்டின் படையினர் உட்பட நேரடியாக தாக்கம் செய்யும் நிலைமை என்பதால் ஓரணியில் திரண்டு நடவடிக்கை எடுப்போம் என்று வலியுறுத்துகின்றேன் எனவும் தெரிவித்துள்ளார்.

# சில பிளாஸ்டிக், பொலித்தீன்களுக்கு இன்று முதல் அமுலாகின்றது தடை

கொழும்பு, மார்ச் 31

இன்று (புதன்கிழமை) முதல் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் வகைகள் சிலவற்றின் பாவனை தடை செய்யப்படும் என்று சுற்றுச்சூழல் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி ஒருமுறை மாத்திரம் பயன்படுத்திவிட்டு அகற்றப்படுகின்ற பொலித்தீன், பிளாஸ்டிக் போத்தல், மைக்ரோ இருபதுக்கும் குறைவான பொலித்தீன், பெட் போத்தல் , செம்போ பக்கெட், காட்டன் பட் மற்றும் காற்று நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் விளையாட்டுப் பொருள்கள் என்பன தடைசெய்யப்படும்.

இந்த பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருள்கள் அதிகமானவை சூழலுடன் சேர்வதால் இந்நாட்டில் அதிகமாக சூழல் மாசடைவு ஏற்படுவதுடன், குடிதண்ணீர் மற்றும் நீர் மாசடைவதாகவும் தெரியவந்துள்ளது.

எனவே, இவ்வாறான பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திகள் சிலவற்றை மார்ச் 31 முதல் இலங்கையில் உற்பத்தி செய்ய மற்றும் விநியோகிக்கத் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கு பதிலாக சூழலுக்கு உகந்த பொருள்களை அறிமுகப்படுத்தவும் சுற்றுச்சூழல் அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களுக்குள்ளே பிரச்சினையை ஏற்படுத்தி அதில் சிலர் பயனடையப் பார்க்கின்றார்கள்!

## சாணக்கியன் எம்.பி. கருத்து



மட்டக்களப்பு, மார்ச் 31

எங்களுக்குள்ளேயே சிலரை வைத்து பிரச்சினைகளை வளர்த்துவிட்டு அதில் தாங்கள் பலனடைவதற்குப் பலர் முயற்சிக்கின்றார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி என்ற போர்வையில் எமது பல பிரதேசங்களின் வளங்கள் அபகரிக்கப்படுகின்றன. எமது வடக்கு கிழக்கு மக்களை ஏமாற்றி கடந்த காலத்திலே வாக்குகள் பெற்றெடுத்த ஆளுந்தரப்பு அரசியற் பிரமுகர்கள் யாரும் இவை தொடர்பில் குரல்கொடுத்ததாகத் தெரியவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

திருக்கோவிலில் நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

அபிவிருத்தி என்ற போர்வையில் எமது பல பிரதேசங்களின் வளங்கள் அபகரிக்கப்படுகின்றன. இது எமது அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறுகின்றது. அம்பாறை மாவட்டத்திலும் இல்மனைட் பிரச்சினை பாரிய பிரச்சினையாக இருக்கின்றது.

எமது வடக்கு கிழக்கு மக்களை ஏமாற்றி கடந்த காலத்திலே வாக்குகள் பெற்றெடுத்த ஆளுந்தரப்பு அரசியற் பிரமுகர்கள் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்களோ, தெரிவு செய்யப்படாதவர்களோ யாரும் இவை தொடர்பில் குரல்கொடுத்ததாகத் தெரியவில்லை.

கடந்த காலங்களில் அபிவிருத்தி என்ற விடயங்களை நம்மவர்களும் மேற்கொண்டார்கள். ஆனால் அவர்கள் விளம்பரப்படுத்தவில்லை. ஆனால் நாங்கள் செய்யத்தவறிய ஒரே ஒரு விடயத்தை மாத்திரம் விளம்பரப்படுத்தி கடந்த தேர்தலில் எங்களுடைய நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு ஒரு தனிநபரின் செயற்பாடு காரணமாக இருந்தது.

எங்களுக்குள்ளேயே சிலரை வைத்து பிரச்சினைகளை வளர்த்துவிட்டு அதில் தாங்கள் பலனடைவதற்குப் பலர் முயற்சிக்கின்றார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இளைஞர் நாடகவிழாவின் பல நாடகங்கள் சர்வதேசக் கண்காட்சிக்கு அனுப்பப்படும்!

## நாமலின் குறிக்கோள் இது



இளைஞர் நாடக விழாவின் பல நாடகங்கள் நாடு முழுவதும் திரையிடப்பட்டு சர்வதேச கண்காட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

கடந்த 25 ஆம் திகதி இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக கூட்டமைப்பு ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்த 41 ஆவது தேசிய இளைஞர் நாடக விழாவில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

இந்த ஆண்டு தேசிய இளைஞர் நாடகப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு 7 சிங்கள மொழி நாடகங்கள், 12 சிங்கள குறுந்திரைப்படங்கள் மற்றும் 2 தமிழ் நாடகங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

கொரேனாத் தொற்று நிலைமைக்கு மத்தியில் 16 நீண்ட நாடகங்கள், 96 சிங்கள சிறுகதைகள் மற்றும் 10 தமிழ் குறுநாடகங்கள் மாகாண மட்டத்தில் போட்டிகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இதுதொடர்பில் கருத்து தெரிவிக்கையில் -

கொரோனாத் தொற்று காலப்பகுதியில் நாடகத் துறை வீழ்ச்சியடைந்திருக்கும் நேரத்தில், இளைஞர் நாடக விழாவை வலுவூட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மூலம் கலைத்துறை தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்கும், மக்களின் இயல்பு வாழ்க்கையை மீள கட்டியெழுப்புவதற்கும் வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

கலைத்துறையைச் சார்ந்த ஒருவரை பற்றி குறிப்பிடும் போதும் அவர் பற்றி கேள்விப்பட்டதும், பார்த்ததும் தோன்றுவது என்னவென்றால், அவருக்கு மேடை நாடகம் கலைஞரின் ஆரம்ப அடிப்படையாகும். மேடை புத்துயிர் பெற்றால், கலைத் துறைக்கு சிறந்த எதிர்காலம் உருவாகும்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் மாவட்ட அளவில் நாடகக் குழுக்களை அமைக்கும், ஆரம்பிப்பதிலும் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த விழாவின் பல நாடகங்கள் நாடு முழுவதும் திரையிடப்பட்டு சர்வதேச கண்காட்சிகளுக்கு அனுப்பப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சாரதியை தாக்கிய பொலிஸ் அதிகாரி செயற்பாட்டுக்கு யோஷிதவும் கண்டனம்

மஹறகம - ஹைலெவல் வீதியில் பன்னிப்பிட்டிய சந்தியில் பாரவூர்தி சாரதியை தாக்கிய பொலிஸ் அதிகாரியின் செயலுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் யோஷித ராஜபக்ஷ கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் டுவிட்டர் கணக்கில் பதிவிட்டுள்ள அவர் -

இன்று (கடந்த திங்கள்) பரபரப்பான வீதியில் ஒரு பொலிஸ் அதிகாரி இரக்கமின்றி ஒருவரை அடிப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தேன்.

சீருடை அணிந்த ஆண்கள் பொது மக்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கக் கூடாது. அவர்களுக்கு பாதுகாப்பாகவும் காவல்காரர்களாகவும் இருக்க வேண்டும்.

நான் அதிகாரிகளுடன் தொடர்பில் இருக்கின்றேன், நீதி வழங்கப்படுவதை உறுதி செய்வேன்.' - என பதிவிட்டுள்ளார்.

## 6 மோ.சைக்கிள், 3 ஓட்டோ திங்கள் திருடப்பட்டுள்ளன!

நாட்டில் கடந்த திங்கட்கிழமை ஆறு மோட்டார் சைக்கிள்கள் திருடப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் இந்தக் காலக்கட்டத்தில் மூன்று ஓட்டோக்களும் திருடப்பட்டுள்ளன.

திருகோணமலை, புத்தளம், பொரளை, தெமட்டகொட, கந்தனா, அத்துருகிரியா, அங்குணகொளபெலஸ்ஸ, சிலாபம் மற்றும் அம்பலாங்கொடை ஆகிய பகுதியிலேயே இந்த திருட்டு சம்பவங்கள் கடந்த திங்கட்கிழமை பதிவாகியுள்ளன.

நாட்டில் தற்சமயம் மோட்டார் வாகனங்களின் திருட்டு அதிகரித்துள்ளமையால் வாகனங்களை நிறுத்திவிட்டு செல்லும் போது பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

## ஒக்ஸ்போர்ட், அஸ்ட்ராஜெனெக்கா தடுப்பூசியே இலங்கையில் அதிக பயனைக் கொடுத்தது

இலங்கையில் ஒக்ஸ்போர்ட், அஸ்ட்ராஜெனெக்கா தடுப்பூசியின் முதலாவது ஊசியை போட்டுக்கொண்டோரில் நூற்றுக்கு 80 சதவீதமானவர்களுக்கு அதிகூடிய பலன் கிடைத்துள்ளது.

இது தொடர்பாக புதிதாக நடத்தப்பட்ட பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டதாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் ஆய்வுகூட தலைவரான வைத்தியர் சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

இலங்கையில் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெக்கா தடுப்பூசியின் முதலாவது ஊசியை போட்டுக்கொண்டோரில் நூற்றுக்கு 80 சதவீதமானவர்களுக்கு அதிகூடிய பலன் கிடைத்துள்ளது.

புதிதாக நடத்தப்பட்ட பரிசோதனைகள் மூலம் இது கண்டறியப்பட்டுள்ளது.

இது மகிழ்ச்சியான விடயமாகும். எனினும், முதலாவது தடுப்பூசியை போட்டுக்கொண்டால் போதுமானது எனக் கருதக்கூடாது.

கொவிட் 19 தொற்று நோய்க்கு எதிரான நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக்கொள்வதற்கு இரண்டாவது தடுப்பூசியையும் கட்டாயமாகப் போட வேண்டும்.


ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனெக்காத் தடுப்பூசியின் முதலாவது ஊசி 'கொவீஷீல்ட்' எனும் வகையைச் சார்ந்தது.

ஆகவே, அதே வகையைச் சார்ந்த இரண்டாவது தடுப்பூசியையும் வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொள்வது மிக முக்கியமாகும்.

மேலும், முதலாவது தடுப்பூசி ஒரு வகையிலும், இரண்டாவது தடுப்பூசி மற்றொரு வகையிலும் வழங்க முடியுமா? என வெளிநாட்டு மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இந்நாள்களில் பல்வேறு ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். - எனவும் வைத்தியர் சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### இஞ்சி





இஞ்சி உயர்த்தப்பட்ட படுக்கைகளில் அல்லது முகடுகளில் மீது நடுகை மேற்கொள்ளலாம். வயல் நிலத்தை 35 - 40 செ.மீ. ஆழத்திற்கு நன்கு உழப்படுதல் வேண்டும். அத்துடன் நிலம் பண்படுத்தல் வேண்டும்.

நாற்று மேடைகள் 100 செ.மீ. அகலம் கொண்டதாகவும் அத்துடன் கிடைக்கப் பெறுகின்ற இடைவெளிக்கு அமைய நிலம் வித்தியாசப்படலாம். எவ்வாறாயினும் தென்னம் செய்கையுடன் இடைப் பயிராக மேற்கொள்ள கிடைக்கத்தக்க இடைவெளிக்கு அமைய அதன் நீளம் அகலம் மாறுபடலாம். நாற்று மேடையானது உயரம் சுமார் 15 செ.மீ. இற்கும் மேலாகும். நாற்று மேடைகளுக்கு இடையில் வடிகால் 50 செ.மீ. ஆழத்தில் அமைத்தல் வேண்டும்.

இடைவெளி -

வரிசைகளுக்கு இடையே - 30cm
கன்றுகளுக்கு இடையே - மேடை ஒன்றிற்கு 04 வரிசை 25cm
நடுகை ஆழம் - 5 - 7.5cm

மழை பெய்த பின்னரே நடுகை மேற்கொள்ள வேண்டும் நாற்று மேடையில் போதிய அளவு ஈரப்பதன் காணப்படாத போது நீர்ப்பாசனம் வழங்க வேண்டும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிக்க எந்த அனுமதியும் வழங்கப்படவில்லை



## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, மார்ச். 30

இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதியளிக்க அரசு எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை.

– இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் மீன்பிடிக்க அனுமதிப் பத்திரத்தை வழங்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார் என்று ஊடகங்களில் வெளியான தகவல்கள் குறித்து, இன்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக் கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்துக் கூறும்போதே அமைச்சர் உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இந்த விடயத்தில் அமைச்சரால் தனியாகத் தீர்மானம் எடுக்க முடியாது. அமைச்சரவையில் கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டும். ஆனால், இதுவரையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவ்வாறான யோசனையை அமைச்சரவையில் சமர்பிக்கவில்லை.

இதனால் அரசு என்ற ரீதியில் இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடலில் மீன்பிடிக்க எந்த வகையிலும் அனுமதி வழங்கப்படவில்லை.

இதேவேளை, இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் விடுதலை தொடர்பாக அரசு கலந்துரையாடி வருகின்றது. இது தொடர்பில் விரைவில் இந்தியாவிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம் – என்றார்.

# இம்முறை முதல்வர் பதவிக்கு வாய்ப்புக் கிட்டினால் விடேன்!

## மாவை சேனாதிராஜா திட்டவட்டம்



**அம்பாறை, மார்ச் 30**

**கடந்தமுறை வடக்கு முதலமைச்சராக வரும் சந்தர்ப்பம் எனக்கு நூறு வீதமிருந்தபோதும், அதை விக்னேஸ்வரனுக்கு விட்டுக் கொடுத்தேன். இந்தமுறை அப்படியான சந்தர்ப்பம் இருக்கின்றதா என்று எனக்குத் தெரியாது. ஆனால், இம்முறை சந்தர்ப்பம் வந்தால் அதைப் பொறுப்பேற்க வருவேன். மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அது தொடர்பில் நாங்கள் புதிய அணுகுமுறைகளைப் பின்பற்றி தேர்தலுக்கு முகங் கொடுப்போம்.**

**- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டத்தில் நேற்றிரவு தமிழரசுக் கட்சியின் கல்முனைத் தொகுதி செயற்பாட்டாளர்களைச் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளடங்கிய ஓர் அரசமைப்பு ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில் அரசு வரைவை முன்வைத்தால் மக்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வாறாக அரசுடன் ஒரு பேச்சுக்குச் செல்ல வேண்டும் என எமது அங்கத்தவர்களாலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

அதற்கான ஒரு சூழ்நிலை எழ வேண்டும். அரசு அதற்கு அழைப்பு விடுக்க வேண்டும். அரசு அதற்குத் தகுந்ததாக இருந்து அரசமைப்பை உருவாக்குவதற்கு ஆயத்தமாக இருந்தால் அதனை அடிப்படையாகக் கொண்டு நாங்களும் பேச்சு நடத்துவோம். அதற்கான வரைவுகளும் ஏற்கனவே எம்மால் வழங்கப்பட்டிருக்கின்றன.

இலங்கை மீதான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸிலின் தீர்மானம் முன்னரை விட பல படிகளில் முன்னேற்றகரமாக இருக்கின்றது.

இலங்கையை சர்வதேச குற்றவியல் விசாரணைப் பொறிமுறைக்குள் தள்ளுவது இலகுவான விடயம் அல்ல. ஆனால், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் மிகத் தெளிவாக இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டு போக வேண்டும் என்று கருத்துப்பட அறிக்கையிட்டுள்ளார். அதைப் பிரதிபலிக்கக்கூடிய பல விதிமுறைகளும் ஐ.நாவின் புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

தற்போது இந்த அரசு எதற்காக தங்கள் இராணுவத்துக்குத் தண்டனைகள் விதிக்கப்படாமல் பாதுகாப்பதற்கென்று ஓர் அரசியல் சட்டத்தைக் கொண்டு வருவதற்குத் தீர்மானிக்க வேண்டும்? ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின்படி ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் என்பவற்றை ஒட்டித்தான் இந்த அரசு மேற்சொன்ன சட்ட விடயத்தைப் பற்றிப் பேசுகின்றது என்று எண்ணுகின்றோம். இவ்வாறெல்லாம் புதிய தீர்மானம் மிக வலுவானதாக இருக்கின்றது.

சர்வதேசமன்னிப்புச்சபையினர், தயான் ஜயதிலக போன்ற நடுநிலைவாதிகள், சர்வதேசத்தின் பல நாடுகள் போன்றவை இந்தத் தீர்மானம் முன்னரை விட கடுமையானதாக இருக்கின்றது எனவும், அரசுக்குப் பல நெருக்கடிகளை ஏற்படுத் தக் கூடியது எனவும் வர்ணித்திருக்கின்றார்கள்.

இதை விட நான் அதிகம் சொல்லத் தேவையில்லை. குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்குவது மட்டுமல்ல, முதன் முறையாக இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற விடயமும் புதிய தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த நாட்டில் தமிழர்களுக்கான தமிழ்த் தேசத்தின் தமிழ் இன விடுதலைக்கான அரசியல் தீர்வு நிச்சயம் ஏற்பட வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய கட்சிகள் அனைத்தும் சர்வதேசத்தின் ஏனைய சக்திகள் அனைத்தும்ஒருகட்டமைப்பாகச்செயற்படவேண்டும்.

நாங்களும் தேர்தலைத் தாண்டி இந்த இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடியதாக ஒரு சிறந்த கட்மைப்பை எதிர்காலத்தில் சர்வதேச ரீதியாக உருவாக்க வேண்டும். நாங்கள் ஏற்கனவே பல தீர்மானங்களை மேற்கொண்டிருக்கின்றோம். சர்வதேச ரீதியிலும் அவ்வாறான கட்டமைப்பு உரு வாக வேண்டும்.

நாங்கள் வெறுமனே தேர்தலை மையமாகக் கொண்ட ஒரு கூட்டு அல்ல, எங்களுக்கு ஒரு சிறந்த பலம் வாய்ந்த கட்டமைப்பு புலம்பெயர் ரீதியிலும், இங்கும் உருவாக வேண்டும். அது பல நாடுகளின் நிபுணத்துவம் வாய்ந்தவர்களால் இன்று உச்சரிக்கப்பட்டிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன்னாள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அம்மையாரும் சர்வதேச ரீதியில் எமது இனப்பிரச்சினை தொடர்பில் ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று அறிவித்திருக்கின்றார். அது எமக்கு மிகவும் உற்சாகமாக இருக்கின்றது.

நாம் எதிர்பார்த்த முழுவதும் அப்படியே இங்கே கிடைக்காது விட்டாலும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் முன் னேற்றங்கள் தொடர்பில் நாங்கள் ஆர்வம் கொண்டு பொறுத்திருந்து அந்த நடைமுறைகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட வேண்டும்.

மகாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் ஐ.நாவின் புதிய தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தியா போன்ற நாடுகளும் அது தொடர்பில் பேசியிருக்கின்றன. இந்தியா நடுநிலைமை வகித்தாலும் மிக ஆக்கபூர்வமான பணிகளை அந்தத் தீர்மானத்தின் ஊடாக எடுத்திருக்கின்றது. அந்தப் பொறுப்பையும் நாங்கள் உணருகின்றோம். அவர்கள் மிகவும் தந்திரோபாயமாக அந்தத் தீர்மா னத்தில் நடுநிலைவகித்திருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் சிறந்த முறையில் எமது மக்களின் விடுதலைக்காக சர்வதேசத்தில் வேலைசெய்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடைபெற வேண்டும் என்று பல நாடுகளும் வற்புறுத்தியிருக்கின்றன.

அவ்வாறு நடைபெறாது விட்டாலும் அந்தப் பல நாடுகளும் இந்த அரசுக்கு எதிராகத்தான் செயற்பட வேண்டும். மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அது தொடர்பில் நாங்கள் புதிய அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டி இருக்கும். அதனூடாக அதனை நாங்கள் முகங்கொடுப்போம்.

ஆளுங்கட்சிகள் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளைக் கைப்பற்ற வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் நாங்களும் எவ்வளவு தூரத்துக்கு மிகப் பெரிய அளவில் ஒன்று பட்டு செயற்பட முடியும், தேர்தல் வெற்றியைப் பெற முடியும் என்பது பற்றி ஆராய்வோம்.

கடந்த முறை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் நான் போட்டியிடும் நிலைமையிருந்தது. எனினும், நான் போட்டியிடவில்லை. நான் போராட்ட வழிமுறைகளையே பின்பற்றுகிறேன் எனக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் விளக்கமளித்தேன். விக்னேஸ்வரனைக் கொண்டு வருவதில் நான் முக்கிய பங்காற்றினேன்.

அந்த மாகாண சபை சிறப்பானதாகத் தான் இருந்தது. இருந்தாலும், அது முறையாகச் செயற்படவில்லையென்ற விமர்சனம், எமது கட்சியின் பின்னடைவுக்கு ஒரு காரணமாக அமைந்தது.

அப்போது நான் முதலமைச்சராக வர வேண்டுமென்ற சந்தர்ப்பம் நூறு வீதமாக இருந்தது. இப்போது அப்படியான சந்தர்ப்பம் இருக்கின்றதோ தெரியாது. மாகாண சபை நடைமுறையில் இருக்குமா, தேர்தல் வருமா என்பதெல்லாம் தெரியாது. ஆனால், இம்முறை அப்படியொரு சந்தர்ப்பம் வந்தால், நான் பொறுப்புக்கு வருவேன் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன் – என்றார்.

# பிரிவினைவாதத்துக்குத் தூபமிடும் சகலருக்கும் இலங்கை கதவடைப்பு

கொழும்பு, மார்ச். 30

தமிழீழ விடுதலைப்புலிகளின் கொள்கைகளைப் பின்பற்றும் மற்றும் பிரிவினைவாதத்தை ஊக்குவிக் கும் சகலரையும் இலங்கை அரசு தடை செய்யும் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

7 புலம்பெயர் அமைப்புகளுக்கும், 388 நபர்களுக்கும் இலங்கை அரசு தடை விதித்துள்ளமை குறித்து இன்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று அரசியலமைப்பின் கீழ் பிரிவினைவாதமும் தடைசெய்யப்பட்டுள்ள நிலையில் அவ்வாறான கொள்கைகளை உடையவர்களுடன் இலங்கை அரசு தொடர்புகளைப் பேண வேண்டிய அவசி யம் கிடையாது.

இதனால் இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொள்கைகளைப் பின்பற்றும் மற்றும் பிரிவினைவாதத்தை ஊக்குவிக்கும் குழுக்கள் மற்றும் நபர்களை அரசு தடை செய்யும் – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்கடன் திட்டத்தைத் தடைசெய்க முல்லைத்தீவில் பெண்கள் போராட்டம்






முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றலில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நுண்நிதிக்கடன் நிறுவனங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள்.

மேலும் புதுக்குடியிருப்பு நகரில் வடமாகாண மக்கள் திட்ட ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யுவசக்தி பெண்கள் அமைப்பால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி முன்பாக ஆரம்பமாகிய இந்த கவனவீர்ப்புப் போராட்டம் புதுக்குடியிருப்பு நகரைச் சென்றடைந்து.

போராட்டக்காரர் கவனவீர்ப்பை வெளிப்படுத்தியுள்ளதுடன் நுண்கடன் தொடர்பிலான விழிப்புணர்வு நடவடிக்கை தொடர்பில் துண்டுப் பிரசுரங்களையும் மக்களுக்கு வழங்கினார்கள்.

நுண்நிதி கடனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 08 ஆம் நாள் தெற்கில் தொடங்கப்பட்ட சத்தியாக்கிரக போராட்டத்திற்கு ஆதரவாக இந்த போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அனைத்து நுண்கடன்களையும் இரத்து செய்யவும், கொள்ளைக்கார நுண்கடன் பற்றிய கடன் கணக்கு பரிசோதனை செய்யும் வரை கடன் மீள அறவிடுவதை இடைநிறுத்தவும், கடனால் பாதிக்கப்பட்டவர்கள் மீதான நிதி நடவடிக்கைகள் அனைத்தையும் உடன் நிறுத்தவும், நுண்கடன்களினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரங்களை கிரிப் தரவுகளில் இருந்துஅகற்றவும்,பாதிப்பற்றசமூகமுன்னேற்றத்துக்கான பெண்களுக்கான, பெண்களாலான நிதி முறைமையொன்றை உருவாக்கவும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்துஇந்தபோராட்டங்கள்முன்னெடுக்கப்பட்டன.

# நுண் கடன் நிதிக்கு எதிர்ப்பு; மட்டக்களப்பிலும் போராட்டம்!

இலங்கையில் அதிகரித்து வரும் நுண்நிதி கடன்களுக்கு எதிராக நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை மட்டக்களப்பு பதுளை வீதி கித்துள் கிராமத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது .

கடந்த சில மாதங்களாக ஹிங்குராங்கொட பிரதேசத்தில் நுண்கடனால் பாதிக்கப்பட்ட சில பெண்கள் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமையை அடுத்து அவர்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது .

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் மறுமலர்ச்சி பெண்கள் அமைப்பு சேர்ந்து கோப்பாவெளி, உறுகாமம், கித்துள் புல்லுமலை போன்ற பகுதியைச் சேர்ந்த பெண்களால் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஜனாதிபதிக்கு கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பக்தி இயக்கத்தின் முன்னோடியாய்....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னால் வந்த நாயன்மார்களுக்கும் ஆழ்வார்களுக்கும் பொருள் மரபிலும், யாப்பு முறையிலும் அம்மையாரே வழிகாட்டியாய் அமைந்திருக்கிறார். அவரின் பிரபந்தங்கள் அவர்களுக்குப் பாடமாக நல்லாசிரியனாக முன்னின்றன. வெண்பாவைக் கையாண்டு சங்கமருவிய கால நிலையினைப் பேணினார். ஆனால் தனது உள்ளத்தில் எழும் தெய்வனுபங்களை, உணர்ச்சிகளை வெளிப்படுத்த வெண்பா யாப்பு சிறந்ததாக எனக்கருதி விருத்தம் என்னும் யாப்பினைக் கையெடுக்கின்றார். அம்மையாரின் இந்தச் சிந்தனையானது தமிழ் இலக்கியப் பாதையில் புதிய இலக்கிய மரபு ஆரம்பித்து வைத்தது.

இசையால் இறைவனைப் பாடும் பதிகப் பாதையினை அம்மையாரே தொடக்கி வைக்கிறார். பதிகத்தின் நிறைவில் இடம் பெறும் திருக்கடைக் காப்புப் பாடலில் – பாடுபவர் பெயர், பாடுவோர் பெறும் நலன்கள், ஆகியவற்றைக் குறிப்பிடும் முறையையும் ஆரம்பித்து வைத்தவரும் அம்மையாரே ஆவர். இதுவே சம்பந்தப் பெருமானுக்குக் கைகொடுத்தது. அந்தாதி என்னும் யாப்பினை அம்மையார் காட்டுகிறார். பின்னர் தொடரும் இலக்கியப் பெருவழிக்கு இவை யாவுமே பெருவெளிச்சமாய் அமைகின்றன என்பதை மனமிருத்தினால் அம்மையாரின் ஆளுமை தெள்ளிதிற் புலனாகும்.

நிலையாமையை வலியுறுத்தி இலக்கியம் பேசப்பட்ட நிலையில் – இல்லறத்தில் இன்பங்காண இறைவன்பால் இன்பங்கண்ட காரைக்கால் அம்மையாரின் சிந்தனையும் அதன் நிமித்தம் வெளிவந்த அவரின் இலக்கிய வெளிச்சமும், மக்கள் மனதில் நல்லதோர் நம்பிக்கையினை வாழ்க்கையில் உருவாக்குவதாக அமைந்தது. பெண்ணாக இருந்தும் ஈமப்புறங் காட்டினைக் கண்டு அஞ்சாமல் அங்கு ஆண்டவன் ஓயாமல் நடனமிடுகிறான் என்று கண்டு கொள்ளுகிறார். இச்செயலானது அம்மையாரினால் அஞ்சிய பெண்களுக்குக் காட்டிய புதிய பாதையாக எடுத்துக் கொள்ளவும் – அம்மையாரின் புதியதான ஒரு சமயப்பாதையினைக் காட்டி நிற்பதையும் விளக்கி நிற்கிறது அல்லவா? இப்படிச் செய்தமையால் காரைக்கால் அம்மையார் தனித்துவம் மிக்க பெண்ணரசியாய் மிளிர்கிறார் என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. சுடு காட்டில் இறைவனின் நடனத்தைக் காண ஒரு சாதரண பெண்மணி விரும்பியமையும், சுடலையினை நடனமிடும் இடமாகக் கண்டு ஆனந்தம் அடைந்தமையும், அம்மையாரின் மனதில் தோன்றிய வித்தியாசமான போக்கினையே காட்டுகின்றன. அந்த நடனத்தை ரசிப்பவர்கள் பேய்களாக இருப்பதால் தனக்கும் பேய் உருவினை ஆண்டவனிடம் வேண்டிப் பெற்றார் என்பதும் அம்மையாரின் நிலையினை அடியார்கள் நிலையில் பார்க்கும்பொழுது மிகவும் வேறுபட்ட, மாறுபட்ட, புதிய தொரு கோணத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது எனலாம்.

சிவனைப் பற்றி ஏனைய இலக்கியங்களில் காட்டியதை விட காரைக்கால் அம்மையார் தனது பாடல்கள் வாயிலாக காட்டிய பாங்கு மிகவும் வளர்ச்சி உடையதாகவே இருக்கிறது என்று பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும்.

இறைவனுடன் அன்பு பூண்டுஅவனுக்கு அடியவனாகவும், அடிமையாகவும், வாழ முற்படவேண்டும். இறைவனை ஏத்தினால் பிறவி நீங்கும். இறைவனை நினைப்பவர் நெஞ்சுளே உறைகின்றான். அவனை அன்பு செய்யத் தொடங்கினால் அவலம் இல்லை. அவனிடம் அன்பு செய்தால் இருவினை கழலும் என்ற கருத்துக்கள் சிவ வழிபாட்டு வரலாற்றில் முதன் முதலாகக் காட்டித் தனது பக்திப் பனுவல்களை வழங்கியவர் காரைக்கால் அம்மையார் என்பது மனங்கொள்ளத்தக்கது.

கரைக்கால்தந்த தவச்செல்வி , தமிழ்ச்செல்வி , புனிதவதி என்று பெருமையுடன் காட்டும் சேக்கிழார் அவர்கள் – அம்மையாரை சைவ பக்தி இலக்கிய வரலாற்றில் மிகவும் உன்னத நிலையிலே வைத்து ஏற்றிப் போற்றுகிறார். பின்னே வரப்போகின்ற சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய அருளாளர்கள் பாடவிருக்கும் பதிகங்களுக்கெல்லாம் முன்னோடியாகப் பாடிய பெருமை மிக்கவர் அம்மையார் என்பதால் அவரின் பதிகங்களுக்கு மூத்த நல்பதிகம் என்னும் பெயரைக் கொடுத்து பெருமைப்படுத்துகிறார்.

'அடுப்பூதும் பெண்களுக்குப்படிப்பெதற்கு?' என்னும் நிலையினை வெறுத்து நிற்கும் – சேக்கிழார் காரைக்கால் அம்மையாரின் பெருமையைக் காட்டி அவரைத்தொடர்ந்து திலவதியார், மங்கையற்கரசியார் போன்றவர்களைக் காட்டி பெண்கள் எல்லோருக்கும் – ஏன் பெண்களை ஒதுக்கிய சமூகத்துக்கே நல்லதோர் பாடத்தைப் புகட்டுகிறார் என்பது புலனாகிறதல்லவா?

தமிழ் நாட்டிலே முதன்முதலாக சைவநாயன்மார் வரிசையில்,வணங்கப் பெற்றவர் என்னும் பெருமைக்குரியவர் காரைக்கால் அம்மையார் அவர்களே ஆவர். சிலை அமைத்து வழிபாடும் அம்மையாருக்கு நடத்தப்படுகிறது. வணிகத்துக்குச் சென்றவர்கள் அம்மையாரின் சிலையினை எடுத்துச் சென்றுள்ளனர் என்று அறிய முடிகிறது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலே இவ்வாறு நடைபெற்றிருக்கிறது என்பது மனமிருத்த வேண்டிய கருத்து. அம்மையாரின் வழிபாடானது தாய்லாந்து, கம்பூச்சியா, இந்தோனேஷியா, பாலி, போன்ற இடங்களில் பரவியிருக்கிறது என்பதையும் வரலாற்றால் கண்டு கொள்ளுகிறோம். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அம்மையாரின் வழிபாடு பரவி இருந்திருக்கிறது என்பதற்கும் ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

காரைக்கால் அம்மையாரின் வழிபாடு மட்டுமல்ல அவரின் வரலாறும் வடமொழி, தெலுங்கு, கன்னடம் போன்ற பிறமொழிகளிலும் பரவி இருக்கிறது என்பது தமிழ் மொழிக்கும் சைவத்துக்கும் கிடைத்த மிகப்பெரிய சிறப்பு என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. அப்படிப் பெருமைக்குரிய காரைக்கால் ஈன்ற தவச்செல்வி, தமிழ்ச்செல்வி, புனிதவதியான காரைக்கால் அம்மையினை நினைப்போம். அவரின் ஆற்றலை, பக்தியை அனைவருடனும் பகிர்ந்து அவரைப் போற்றி நிற்போம் .

**பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்**
**உன்னை யென்றும்**
**மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான்**
**மகிழ்ந்துபாடி**
**அறவாநீ நீயாடும்போது அடியின் கீழுருக்க**
**என்றார்**

# பாடசாலை மாணவனை கடித்துக்குதறிய நாய்கள்

*மாத்தளையில் தரம் 1இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவனை தெரு நாய்கள் கடித்துக்குதறிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.*

*இதில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட சிறுவன் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*பாடசாலை விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த ஐந்து வயது சிறுவனே இதில் பாதிக்கப்பட்டுள்ளான்.*

*நாய்களின் கடிக்கு இலக்கான சிறுவனை விளையாட்டு மைதானத்தில் பணி புரிந்த ஊழியர்களின் தீவிர முயற்சிக்குப் பின் மீட்கப்பட்டுள்ளான்.*

*இந்தச் சம்பவத்தின்போது ஒரு நாய் உயிரிழந்துள்ளது. காயமடைந்த சிறுவன் மாத்தளை மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.*

# 176 தொற்றாளர்கள் பூரண குணமடைவு!

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களுள் நேற்று (செவ்வாய்க்கிழமை) மேலும் 176 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களில் 89 ஆயிரத்து 90 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை 566 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# தேங்காய் எண்ணெயுடன் இரு பவுஸர்கள் பறிமுதல்

தங்கொட்டுவ பகுதியில் நச்சு இரசாயனப் பதார்த்தம் அடங்கியுள்ளதாக சந்தேகிக்கப்படும் 27 ஆயிரத்து 500 லீற்றர் தேங்காய் எண்ணெய் கொண்ட இரு பவுஸர்களை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

119 என்ற அவசர எண்ணுக்கு கடந்த திங்கள் இரவு வந்த அழைப்புக்கு இணங்க பொலிஸார் முன்னெடுத்த விரைவான நடவடிக்கையின்போதே இந்த பறிமுதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது இரு வாகனங்களின் சாரதிகளையும் பொலிஸார் கைதுசெய்தனர்.

சந்தேக நபர்கள் 25 ஆம் திகதி ராகமையில் உள்ள ஒரு கிடங்கிலிருந்து இந்த தேங்காய் எண்ணெயை இரு பவுஸர்களினூடாக கொண்டு வந்திருந்ததுடன், தங்கொட்டுவ பகுதியில் அமைந்துள்ள ஆலையில் வைத்து குறித்த எண்ணெய் பவுஸர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந் நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய்களின் மாதிரிகளை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# தேங்காய் எண்ணெய் மீது உள்ள அச்சத்தை அரசு போக்கவேண்டும்

## எதிர்க்கட்சி வலியுறுத்தல்

நாட்டில் தற்போது காணப்படுகின்ற தேங்காய் எண்ணெய் தொடர்பான சர்ச்சை தொடர்பாக உத்தியோக பூர்வமாக தெளிவான நிலைப்பாட்டை அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

தமது சகாக்களின் நலன் தொடர்பில் மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருக்காமல் நாட்டு மக்கள் அச்சமின்றி தேங்காய் எண்ணெய்யை கொள்வனவு செய்வதகான சூழல் விரைவில் உருவாக வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

தேங்காய் எண்ணெய்யைக் கொள்வனவு செய்வதில் மக்களுக்கு அச்சம் ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக தெளிவான நிலைப்பாட்டை அறிவிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.



சர்ச்சைக்குரிய எண்ணெய் சந்தைகளுக்குச்சென்றுள்ளதா ஆம் எனில் எவ்வாறு சென்றது என்பதையும் அரசாங்கம் அறிவிக்க வேண்டும்.

தமது சகாக்களின் நலன் தொடர்பில் மாத்திரமே சிந்தித்துக் கொண்டிருக்காமல் நாட்டு மக்கள் அச்சமின்றி தேங்காய் எண்ணெய்யை கொள்வனவு செய்வதகான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

அண்மையில் ஒரு சிலரது பைகளை பணத்தால் நிரப்புவதற்காக முன்னெடுக்கப்பட்ட சீனி மோசடியைப் போன்று இவ்விடயத்திலும் செயற்பட வேண்டாம் என்று வலியுறுத்துகின்றோம்.

ஆனால் இது போன்ற முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதைத் தவிர்த்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று அவரதுபிரச்சினையைமக்களிடம்கூறிக்கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் நாடளாவிய ரீதியில் சகல பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனவே பாடசாலை மாணவர்கள் அடிப்படை சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்ற கொவிட் நன்கொடையின் மூலம் நிவாரணம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். – என்றார்.

# கொழும்பு துறைமுக நகர நிர்வாக கட்டமைப்பு ஜனாதிபதியின் கீழே!

## உதய கம்மன்பில கூறுகின்றார்



கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளமை எவ்வித பாதகமான நிலைமையையும் ஏற்படுத்தாது.

காரணம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழுவின் ஊடாகவே இவை நிர்வகிக்கப்படுகின்றன என்று அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

கொழும்பு துறைமுக நகரம் இலங்கையில் உருவாகிய மிக முக்கிய அபிவிருத்தி வேலைத்திட்டமாகும்.

இதன் மூலம் இலங்கையை ஆசியாவின் வர்த்தக மையமாக உருவாக்க எதிர்பார்க்கப்பட்டது. எனினும் இலங்கை அந்த வாய்ப்பை இழந்துள்ளதோடு சிங்கப்பூர் மற்றும் டுபாய் என்பன மாற்று வர்த்தக மையங்களாக உருவாகின.

எனினும் உலக வங்கி அதன் தலைமை அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்காகன இடமாக இலங்கை உபயோகிக்கும் வகையில் அதற்கான அடிப்படைவசதிகளை செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கையை சகல துறைகளினதும் மையமாக உருவாக்க வேண்டும் என்பது 2010 இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எதிர்பார்ப்பாகக் காணப்பட்டது.

அதற்கான முன்னெடுப்பாகவே கொழும்பு துறைமுக நகரத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு தான் வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

2008 ஆம் ஆண்டு வியாபார சட்டத்தின் கீழ் இவ்வாறு வரிச் சலுகை வழங்குவதற்கு சட்டரீதியாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கேள்வி:- இவ்வாறான நிலையில் ஹொங்கொங் மற்றும் மொறோக்கோ ஆகிய நாடுகளில் வர்த்தக ஸ்தலமாக இலங்கை மாற்றமடையக் கூடுமா?

பதில்:-ஒருபோதும் அவ்வாறு இடம்பெறாது. கடந்த அரசாங்கத்திற்கு இதற்கான தேவை காணப்பட்டது. எமக்கு அவ்வாறானதொரு இலக்கு கிடையாது. எமது நாட்டு கலாசாரத்தை சீரழித்து வருமானமீட்டும் தேவை தற்போதைய அரசாங்கத்திற்கு கிடையாது.

கொழும்பு துறைமுக நகரத்தின் நிர்வாகம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ள நிர்வாகக் குழுவின் ஊடாகவே நிர்வகிக்கப்படுகிறது.

இதன் சகல உறுப்பினர்களும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டவர்களாவர். துறைசார் நிபுணர்கள் அடங்கிய குழுவினாலேயே நிர்வாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனவே இலங்கைக்கு இதன் மூலம் பல நன்மைகளே கிடைக்கின்றன. -என்றார்.

# ரவி உள்ளிட்ட 8 பேரின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 31

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட பிரதிவாதிகள் 8 பேரும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி வரையில் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் அவர்களுக்கு பிணை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் தீர்ப்பு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2016 ஆம் ஆண்டு மத்திய வங்கியின் பிணை முறி ஏலத்தின் போது 5000 கோடி ரூபாக்கும் அதிக பெறுமதியுடைய பிணை முறிகளைத் தவறாக பயன்படுத்தினர் என இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மொஹான் பீரிஸ், நவாஸ் உள்ளிட்ட மூவர் இலஞ்ச, ஊழல் வழக்கிலிருந்து விடுவிப்பு

முன்னாள் சட்டமா அதிபரும் பிரதம நீதியரசருமான மொஹான் பீரிஸ், முன்னாள் பிரதி சொலிசிட்டர் ஜெனரலும் தற்போதைய நீதியரசர் திலீப் நவாஸ் உள்ளிட்டோர் இலஞ்ச, ஊழல் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உத்தரவைக் கொழும்பு தலைமை நீதிவான் புத்த ஸ்ரீ ராகல நேற்று (செவ்வாய்க்கிழமை) பிறப்பித்தார்.

கடந்த 2010 டிசெம்பர் முதலாம் திகதிக்கும் 30 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் இலங்கை மின்சார தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர்கள், சில முன்னணி ஊழியர்களுக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆராய சிறிபால ஜயலத் குழு நியமிக்கப்பட்டுள்ள நிலையில், அக்குழுவின் அறிக்கையில் அம்மோசடிகள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்க சட்ட மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் குறித்த அறிக்கையின் பிரகாரம் குற்றவியல் வழக்கொன்று தாக்கல் செய்ய முடியாது எனத் தீர்மானித்து அதனைத் தமது கருத்தாகக் கடிதம் மூலம் முதலாம் சந்தேக நபர் மூன்றாம் சந்தேக நபருக்கு கொடுத்ததன் ஊடாக இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் துஷ்பிரயோகம் எனும் குற்றத்தை புரிந்துள்ளதாக மூவருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் சட்டமா அதிபரும் பிரதம நீதியரசருமான மொஹான் பீரிஸ், சட்ட மா அதிபர் திணைக்களத்தின்பிரதிசொலிசிட்டர் ஜெனரலாக செயற்பட்ட, தற்போதைய உயர் நீதிமன்ற நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் மின்சக்தி அமைச்சின் முன்னாள் செயலாளரான எம்.எம்.சி. பெர்டினாண்டோ ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டு கொழும்பு பிரதான நீதிவான் முன்னிலையில் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.03.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org